# செந்தமிழ்

தொகுதி 81 மார்ச் 1987 பகுதி 1

— உள்ளே —

தகழி சிவசங்கர பிள்ளை

அறிவியலும் ஆபத்தும்

போர் வீரனின் மரணம்

அறிவியல் வினா - விடை

மதுரைத் தமிழ்ச்சங்கம்
THE MADURA TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்கம் - மதுரை - 1.

ஆசிரியர் : என். எஸ். முத்துமலைச்சாமி பி.ஏ.பி.எல்.

# செந்தமிழ்

தொகுதி 81 மார்ச் 1987 பகுதி 1

## உள்ளே

எண் பொருள் பக்கம்

முன்னுரை

1. தகழி சிவசங்கர பிள்ளை 1

2. அறிவியலும் ஆபத்தும் 7

3. போர்வீரனின் மரணம் (கவிதை) 8

4. அறிவியல் வினா - விடை
— திரையன் 9

5. மொழி பெயர்ப்பு நூல்கள் 13

6. கடல் கடந்த கண்ணன்
— பி ஆர். ஸ்வாமி 14

7. நாடகவியல் எழுந்த சூழல் 21
—வி. சு. கோவிந்தன் எம்.ஏ.எம்.பி.எல்)

8. காஷ்மீர சைவ சமயம்
அன்றும் இன்றும்
— டாக்டர் சி, எல். ரெய்னா 29

9, பவபூதியின் உத்தர ராம சதம் 34

10. நூல்மதிப்புரை 39

பொறுப்பாசிரியர் : டாக்டர் பழநி. அரங்கசாமி

# தகழி சிவசங்கர பிள்ளை

தலைசிறந்த மலையாள நாவலாசிரியரும், சிறுகதை எழுத்-தாளரும் ஆகிய தகழி சிவசங்கர பிள்ளை ஒரு வழக்கறிஞர். சிறு கதைகள் எழுதத் தொடங்கிய காலத்தில், எழுத்தாளராக அவர் ஈட்டிய வருமானம் வழக்கறிஞர் தொழிலில் கிடைத்ததை விட அதிகம். எனவே வக்கீல் தொழிலை உதறிவிட்டு முழுநேர படைப்பு எழுத்தாளராக மாறி விட்டார். அவருக்கு வயது எழுபத்து நான்கு. இருநூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளும் இருபத்து நான்கு நாவல்களும் எழுதியுள்ளார். இந்திய அரசினர் 1985-ஆம் ஆண்டு பத்மபூஷண் பட்டம் அளித்துப் பாராட்டி யுள்ளனர். கேரள சாகித்ய அகாடெமியின் தலைவராக இருந்தவர் தகழி. அவரது செம்மீன் எனும் நாவல் வெள்ளித்திரையில் வெளிவந்தபோது இந்திய நாடெங்கணும் திரையிடப்பட்டு குடி-யரசுத்தலைவரின் தங்க மெடல் பரிசினையும் பாராட்டுதல்-களையும் பெற்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட பிறமொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ள 'செம்மீன்' ஒன்றே தகழியின் இறவாத புகழுக்கும் பெருமைக்கும் அடித்தளமாக விளங்குகிறது.

கேரள மாநிலத்தில் ஆலப்புழைக்கு அருகில் உள்ள தகழி என்னும் சிற்றூரே சிவசங்கரபிள்ளை பிறந்த இடம். சாஸ்-தாவுக்குரிய புகழ் பெற்ற கோவில் ஒன்றும் அவ்வூரில் உள்ளது. அப்போது மலையாளப்பகுதிக்கு மட்டுமே அறிமுகமாகி இருந்த அவ்வூர் இன்று சிவசங்கர பிள்ளையினால் இந்திய நாடு முழு-மைக்கும் அறிமுகமாகி உள்ளது. 1912-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்-களில் சங்கர குருப் தம்பதியருக்கு பிறந்த சிவசங்கரன் இலக்கிய ஈடுபாட்டிலிருந்து தடம் புரண்டு போயிருந்தால், அநேகமாக ஒரு கதகளி ஆட்டக்காரராக இருந்திருப்பார். ஏனெனில் தகழியின் சிற்றப்பா குருகுஞ்சன் அந்தப் புராதனக் கலைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். சிவசங்கரனின் இளமைக்கல்வி சொந்த ஊரிலேயே நிறைவுற்றது.

உயர்நிலைக் கல்வி முடிந்ததும். சிவசங்கரன் திருவனந்த-புரம் சட்டக்கல்லூரியில் பயின்றார். பட்டம் பெற்றதும் சிறிது காலம் அம்பலப் புழையில் வழக்கறிஞராகவும் தொழில் நடத்-

தினார். 'தியாகப்பரிசு' என்பதே தகழியின் முதல் நாவல். மாணவனாக இருந்தபோதே எழுதப்பட்டது. அப்போது அவருக்கு வயது இருபது. அப்போதைய சட்டக்கல்லூரி முதல்வர் அந்நாவலை எழுதியமைக்காக சிவசங்கரனைப் பாராட்டவில்லை. படிப்பில் கவனமாக இருந்து, பட்டம் பெற்று தொழிலை நடத்த வேண்டும் என்றே ஆணையிட்டார். ஒரு சிறந்த படைப்பு இலக்கிய எழுத்தாளர் உருவாகிக் கொண்டிருப்பதை அவர் எண்ணிப் பார்த்திருக்க முடியாது அல்லவா!

தகழியின் இலக்கிய அறிமுகமே சிறுகதைகளின் வழியாகத் தான். புது வெள்ளம், பட்டாளத்துக்காரன், தாசில்தாரின் தந்தை போன்ற அவரது சிறுகதைகள் மிகவும் புகழ் வாய்ந்தவை. குட்டநாடு பகுதியில் ஆற்று வெள்ளத்தில் சிக்கி உயிருக்குப் போராடும் ஒரு நாயினிடம் மனிதப்பாங்கினையும், அதே நேரத்தில் அந்த வெள்ளத்திலேயே அகப்பட்டுக் கொண்ட ஒரு மனிதனிடம் விலங்கின் இயல்பினையும் இருப்பதாகச் சுட்டி, இரண்டு உயிர்களிடத்தும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் படம் பிடித்துக் காட்டுவதே 'புதுவெள்ளம்' என்னும் சிறுகதை.

1948-ஆம் ஆண்டு வெளியான 'இரண்டுபடி அரசி' (ரண்டிடங்கழி) எனும் நாவலே தகழியின் பரவலான புகழுக்குக் காரணமாக இருந்தது. கேரளத்து விவசாயத் தொழிலாளிகளின் ஏற்ற இறக்கத்தைச் சாதாரண இலக்கிய நடையில் வெளிப்படுத்துவதே இந்த நாவலாகும். வாழ்க்கையின் அடிமட்டத்தில் கிடந்து உழலும் ஏழைகளை இரக்க உணர்வோடும் அன்போடும் அவர்கட்கு உதவி புரியும் தன்மையோடும்தான் தனது நாவல்களில் சித்தரித்தார். "நகரசுத்தித் தொழிலாளியின் மகன்" (தோட்டியுடே மகன்) எனும் நாவலிலும் வாழ்க்கையின் நலிந்த பிரிவினருக்கு நாவலாசிரியர் காட்டும் அனுதாப உணர்வே தெளிவாகத் தெரிகிறது.

தகழி சிவசங்கரபிள்ளையின் நீடித்த புகழுக்கு ஆதாரமாகிய செம்மீன் (1956) எனும் நாவல் மீனவர் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. நாட்டுப்புறக்கதைப் பாடல்களில் சித்தரிக்கப்படும் காதலைப் போன்றே இந்த நாவலும் காதலுணர்வைப் பிரதிபலிக்கின்றது. மீனவ சமூகத்தினரின் பல்வேறு செயல்களுக்கு காரண-

மான அவர்களது பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும், மரபுகளையும் தகழி அப்படியே ஒத்துக் கொள்கிறாரா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆயினும் பரதவர் சமூக நம்பிக்கை ஒன்றனைக் களமாகப் பயன்படுத்தியே இக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

கட்டுமரம் ஏறிக் கடல்மீது சென்று மீன்பிடிக்கும் பரதவர் உயிரோடு திரும்ப வேண்டுமாயின், அவர்களது இல்லத்தில் மனைவியர் தூய்மை கெடாத கற்பு நெறியில் வாழ வேண்டும். இல்லையாயின் கெட்டுப்போன பெண்ணின் கணவனைக் கடல் விழுங்கி விடும். இதுவே அவர்களிடை நிலவி வந்த நம்பிக்கை. மனைவியின் கெட்ட நடத்தைக்குக் கணவனை விழுங்கி விடும் கடலின் இயல்பில், ஒரு மானுடத்தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. கருத்தம்மா எனும் பரதவப்பெண் மீன் விற்றுப் பிழைக்கும் ஒரு முகமதியனைக் காதலிக்கிறாள். இதனைப் பயன்படுத்தும் அவளது தந்நை அந்த இளைஞனிடமிருந்து பணம் பறிக்கிறான். கருத்தம்மாவின் நடத்தை பற்றி அனைவரும் பேசத் தொடங்கும் போது, அவளது தந்தை அவளுக்குத் திருமண ஏற்பாடு செய்கிறான். ஒரு ஏழை மீனவ இளைஞனே மாப்பிள்ளை. மணம் முடிந்தாலும், வாயாடிப் பெண்கள் பலர் கருத்தம்மா மீண்டும் அந்த முகமதியனோடு தொடர்பு வைத்துக் கொண்டுள்ளாள் என்றே தூற்றுகின்றனர். இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத கருத்தம்மா தற்கொலை செய்து கொள்ளுகிறாள். மீன் பிடிக்கப் போன அவளது கணவனையும் அதே இரவில் கடல் விழுங்கி விடுகிறது. கணவனைக் கைபிடித்த பின்னும் கருத்தம்மா நெறி தவறினாளா இல்லையா என்பது புதிர்.

ஏணிப்படிகள் (1964) எனும் நாவல் திருவனந்தபுரத்தை மையமாகக் கொண்டு புனைந்துரைக்கப்பட்டது. பேராசை பிடித்த ஒருவன் பதவி உயர்வு பெறுதற்கு முயற்சி செய்வதே கதையின் உள்ளுறையாகும். அரச காரியங்களைச் செய்யும் திவானுக்கு வேண்டியவாறு தாளம் போட்டுக் கொண்டே அவன் முன்னேறுகிறான். திவானுடைய மக்கள் விரோதச் செயல்கள் அனைத்துக்கும் இவன் உடந்தையாகிறான். மன்னராட்சி மறைந்து மக்களாட்சி மலரும்போது நாட்டுக்குப் பிரதம மந்திரியாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருக்கும் இந்த சந்தர்ப்பவாதி

வேண்டியவனாகி விடுகிறான். கேசவபிள்ளை என்னும் இந்தச் சுயநலவாதியின் பாத்திரத்தைச் சித்தரித்துக் கொண்டு வரும்-போதே மக்களாட்சியின் குற்றங்குறைகளையும் தகழி இடித்துரைக்கத் தவறவில்லை ஆட்சியின் பாங்கும், ஆளுவோரும் தான் மாறி வருகிறார்களே தவிர, ஏழை ஏழையாகிக் கொண்டும், பணக்காரன் மேலும் பணக்காரனாகிக் கொண்டேயும் வருகிற ஏற்றத்தாழ்வுகள் சமூகத்தில் மறையவில்லை என்பதே தகழியின் கருத்து.

கயறு என்னும் நாவல் (1978) ஒன்பது பாகங்களைக் கொண்ட மிகப் பெரிய நாவலாகும். ஆங்கிலத்தில் சார்லட் பிராண்ட் எழுதிய 'வூதரிங் கைட்ஸ்' எனும் நாவலைப் போன்று தகழியின் இந்த மிகப்பெரிய நாவலும் முந்நூறு வருடத்துச் சமூக வரலாற்றை மிகவும் விரிவாக எடுத்தியம்புகிறது. அக்கால மத்திய தர விவசாயக் குடும்பங்களைப் பற்றிய செய்திகளுடன் தொடங்கும் இந்த நாவல் மெதுவாக நகர்ந்து கொண்டே வந்து வெள்ளையராட்சி, காந்தியத்தாக்கம், கம்யூனிச ஊடுருவல், நக்சலைட் போராட்டம் ஆகிய சமூக மாறுபாடுகளையும் தன்னுள் அடக்கிச் செல்கிறது. நாவலின் நடையில் கிராமிய வழக்குச் சொற்களும், ஆங்கிலம் கற்றோரின் மிடுக்கு நடையும் விரவி வந்துள்ளன. முழுக்கதையினையும் படித்து முடித்த பின்னர் எந்தவொரு கதாபாத்திரமும் மனதில் நிற்கவில்லையே என்று குறைப்படுவாரும் உண்டு. இந்நாவலின் பாத்திரப்படைப்பு திறம்-பட அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்க உண்மை தான். சமுதாய அமைப்பினையும், விவசாயிகளிடம் காணும் ஏற்றத்-தாழ்வுகளையும் வெளிக் கொணருவதே நாவலாசிரியரின் கொள்கையே தவிர பாத்திரப்படைப்பு அல்ல என்று இதற்கு பதிலளிக்கப்படுகிறது.

நாவலின் போக்கில் கேரளத்தின் பாரம்பரிய, மரபுச் செய்தி-களும் புராணக் கருத்துக்களும், பழமொழிகளும், நாட்டுப்புற வழக்கும், கதைப்பாடல் விவரங்களும், பழக்க வழக்கங்களும், நம்பிக்கையும், வாழ்க்கை முறைகளும் பின்னிப் பிணைந்து காணப்-படுகின்றன. ஒரு வகையில் இந்தப்புதினத்தை 'வட்டார நாவல்' என்றும் குறிப்பிடலாம். அம்பலப்புழா என்னுமிடத்தில் தாலுக்கா

அலுவலகத்தில் மக்கி மடிந்து போன பழங்காலத்து ரெவின்யூ ரெக்கார்டுகளை எல்லாம் துருவிப்பார்த்து குறிப்புகள் எடுத்து இந்த நாவலில் இணைத்துள்ளார். கயறு ஒரு சமூக வரலாற்றுக் கற்பனை என்று சொல்வதற்கு இவையெல்லாம் ஆதாரமாக விளங்குகின்றன.

ஒரு கிராமத்துக்காரன் தன்னுடைய எளிய மொழியில் கதை சொல்லுவது போல இந்த நாவல் அமைந்திருந்தாலும், இடையிடையே நாவலாசிரியரும் வந்து விளக்கம் கொடுக்கிறார், இதில் பயின்று வரும் நூற்றுக்கணக்கான மலையாளச் சொற்களின் பொருளை எந்தவொரு மலையாள அகராதியிலும் காண முடியாது. ஏனெனில் அந்தச் சொற்கள் எல்லாம், கிராமப்புற வழக்காற்றில் காணப்படுபவைகளே. இந்த நாவலைப் பிற இந்திய மொழிகளில் பெயர்க்க விரும்புவார்க்கு இது தொல்லை தருவ-தாகும். கேரளப் பெண்கள், குறிப்பாக நாயர் சமூகத்துப் பெண்கள், நம்பூதிரிப் பிராமணர்கட்கு திருமணத்துக்கு முன்னேயே இச்சைப் பொருளாக இருந்த கொடுமையினைப் படம் பிடித்துக் காட்டும் இந்த நாவலுக்கு வயலார் இலக்கியப் பரிசு 1980-ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டது.

தகழி சிவசங்கர பிள்ளையின் பற்பல நாவல்கள் பிற இந்திய மொழிகளிலும், ஆங்கில, பிரெஞ்சு, ரஷ்ய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட முறையில் தகழி மார்க்சீயக் கண்ணோட்டம் உடையவர். தனது நாவல்கள் பொழுது போக்குக்-காக மட்டுமன்றி கொள்கை விளக்கத்துக்காகவும படிக்கப்பட-வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அடிப்படையில் தன்னை ஒரு வேளாண் குடிமகனாகவே கருதிக் கொள்கிறார். அவரது 'கயறு' நாவலில் தலைமைப் பாத்திரமாக (Hero)க கருதத்தகுவது 'நிலமே' யாகும். எவ்வளவு தான் புதுமையினையும், சீர்-திருத்தத்தையும் அவர் விரும்பினாலும், அடிப்படையில் கேரள-நாட்டு மரபுக்கு அவர் கட்டுப்பட்டவர் தான் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கயறு நாவலில் வரும் மணிகண்டன் கம்யூனிசக் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவன். ஒரு கட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை செல்வதா அல்லது தந்தையாரது

ச்மச்சடங்கில் கலந்து கொள்வதா என்ற சிக்கல் வரும்போது அவன் போராட்டத்தைக் கைவிட்டு விடுகிறான். இந்த மணிகண்டன் தகழியின் மறுபதிப்பு என்றே கருதப்படுகிறான். கயறு நாவலின் கதை அமைப்பிலும், கட்டுக்கோப்பிலும் குறைகாண இடம் உண்டு. இருப்பினும் கேரளத்தின் ஒட்டு மொத்தமான கலாச்சார மணம் கமழும் இந்த நாவலைப் போன்று, பிறிதோர் நாவல் படைப்பது எளிது அன்று என்பதே தகழியின் பெருமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

---

## நேதாஜிக்கு முந்திய போஸ்

இந்தியாவுக்குப் பூரண சுதந்திரப் வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி தீர்மானம் போட்டது 1928-ஆம் ஆண்டு. ஆயினும் அதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னமேயே புரட்சியாளர்களை ஒன்று திரட்டி ஆயுதப் போராட்டத்தினால் விடுதலை பெறத்-திட்டம் தீட்டியவர் ராஷ் பிகாரி போஸ். 1912-ஆம் ஆண்டு லார்டு ஹார்டிஞ்சு என்னும் கவர்னர் ஜெனரலை வெடிகுண்டினால் தாக்க முயன்ற கிரிமினல் வழக்கில் இவரே முதல் குற்றவாளி. இவரைப் பற்றிய ரகசியங்களைக் கூறுவோருக்கு அந்நாளிலேயே 5000/-ரு பரிசு தரப்படும் என்றது ஆங்கில அரசு. மாறுவேடத்தில் போஸ் பஞ்சாப்பிலிருந்து கல்கத்தாவுக்கு வந்தார். புனை பெயரில் கப்பல் பயணம் செய்து சீனாவுக்கு வந்தார். சன்-யாட் சென் அறிமுகத்தோடு ஜப்பான் பயணம் பிரிட்டிஷ் கைக்கூலிகள் தன்னைக் கடத்தி விடுவரோ என்ற அச்சம், 1919-இல் ஜப்பானிய ஹோட்டல் அதிபரின் மகளைக் காதல் திருமணம். இந்த மாறுதல்களுக்கிடையிலும், நாட்டுப்பற்று நீங்கவில்லை. இந்த ராஷ் பிகாரி போஸ் தான் போராட்டத்தின் நடு கட்டத்தில் சுபாஷ் போஸை இந்திய தேசிய போராட்டத்தின் தலைவராக்கியவர்.

---

'முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே'

— திருமந்திரம்.

# அறிவியலும் ஆபத்தும்

மத்திய மாநிலத்துத் தலைநகர் போபாலில் சென்ற ஆண்டு (1985) யூனியன் கார்பைடு தொழிலகத்தில் வெளியாகிய நச்சு வாயுவினால் பல்லாயிரக்கணக்கான கால்நடைகளும், ஏராளமான மனிதர்களும் மாண்டு மடிந்த அவலத்தை இன்னும் நாம் மறக்க-வில்லை. இறந்தோரை விட, உயிரோடிருக்கும் பலர் கண்ணிழந்-தும், செவியிழந்தும் நடைப் பிணமாக உலவிக் கொண்டுள்ளனர். மனித சமுதாயம் அறிவியலின் உச்சியில் இருப்பதாக பெருமைப் பட்டுக் கொண்டிருந்தாலும், அது பற்பல வழிகளில் மனிதனைப் பழி வாங்கிக் கொண்டு தான் உள்ளது. 1986 - நவம்பர் திங்கள் முதல் வாரத்தில் சுவிட்சர்லாந்து நாட்டில் பேஸல் நகரத்தில் இரசாயன கிடங்கு ஒன்றில் நச்சுப் பொருள் ஒன்று தீ விபத்துக்கு உட்பட்டது. புகையும் நெடியும் கலந்து வெளிப்பட்டது. தீயை அணைக்க நீரைப் பீச்சி அடித்தார்கள். மருந்தும் இரசாயனமும் கலந்து 30 - டன் அளவுள்ள கலவை அருகில் ஓடும் ரைன் நதி-யில் சேர்ந்து விட்டது. சுவிஸ் நாட்டில் தொடங்கிய நச்சுப் பொருளின் நெடிய பயணம் 200 - மைல் தூரமும் குறைந்ததாகத் தெரியவில்லை. பிரான்சு, ஜெர்மன், ஹாலந்து ஆகிய நாடுகளின் வழியே பாய்ந்து கடலில் கலக்கும் வரையிலும் அந்த ஆற்றில் இருந்த உயிர்ப் பொருள்கள் மடிந்து விட்டன. செய்தி வெளிப்-பட்டதுமே, ரைன் நதியிலிருந்து பிரியும் கால்வாய்களை எல்லாம் நெடுகிலும் அடைத்து விட்டார்கள். இருப்பினும் இந்த நச்சுப் பொருள் ஆற்றின் நெடுகிலும் படிந்து விட்டதால், நம் நாட்டு விலாங்கு மீன் போன்ற ஈல் என்னும் மீன் வகைகள் முற்றிலு-மாக அழிந்து விட்டன. இறந்து கரை ஒதுங்கிய இந்த மீன் வகை 50 டன் இருக்கும் என்று மதிப்பிடுகிறார்கள். இந்த கொடிய விபத்துக்குக் காரணமான ஸாண்டோஸ் (Sandoz) நிறு-வனத்தாரின் மீது பாதிக்கப்பட்ட மூன்று நாடுகளும் வழக்குத் தொடர எண்ணியுள்ளன.

இயற்கை அன்னையின் மடி மீது தவழும் மனித இனத்துக்கு நீரும், நிலமும், காற்றும் அந்த அன்னையே கொடுக்கிறாள். ஆனால் விஞ்ஞானத்தின் பெயரால் செயற்கையும் போலியுமான வாழ்க்கையை நடத்த விரும்புகிறது இந்த உலகம். நிலம், நீர், வாயு ஆகியவற்றை நச்சுப்படுத்தி தன்னையே அழித்துக் கொள்-ளும் பரிதாப நிலையிலிருந்து நாம் மீள வேண்டுமானால், இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ கற்றுக்கொள்ள வேண்டும்,

# போர் வீரனின் மரணம்

இக் கவிதையினை ஆங்கிலத்தில் எழுதிய வாலஸ் ஸ்டீவன்ஸ் (1879 - 1955) ஒரு அமெரிக்கக் கவிஞர். குறியீட்டுக் கவிதைகள் இவரது தனித்திறமை. காப்பீட்டுக் கழகம் ஒன்றில் மேல்மட்ட அலுவலராக இருந்தவர். இவர் எழுதிய புத்தகங்களினும் இவரைப் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களே அதிகம். இளமைக் காலத்தில் இவர் எழுதிய கவிதைகளில் கருத்தாழமும், தத்துவச் சாயலும் அறிந்து மகிழத்தக்கன.

இலையுதிர் காலம் ஒப்பது போலும்
வாழ்வு சுருங்கச் சாவு நெருங்க
வீழ்கிறான் அந்தோ! போர்ப்படை வீரன்.

மூச்சு அடங்கிப் போனாலும் முத்தின
மரபுச் சடங்கினை மறந்தும் கேளா
மண்ணிலேப் பிறந்த மானுடப் பிறவி

காற்று நிற்பினேல் தானும் நின்றிடும்
இலையுதிர் காலச் சருகினை ஒத்த தோர்
நல்வினைச் சாவினுக்கோ நடுகல்லோ ஏதுமிலை

காற்று நிற்பினும் ஏது நிகழினும்
விண்மீது உலவும் வியன் முகிற் கூட்டமோ
தன் தன் போக்கில் தவழ்ந்து போகுது!

தமிழில் — பழநி. அரங்கசாமி

# அறிவியல்
# வினா—விடை

— திரையன்

(1) கம்ப்யூட்டர்களின் பயன் யாது?

இற்றை நாட்களில் கையடக்கமான கூட்டல் எந்திரங்களைக் கடைகளில் பார்க்கிறோம். தொடக்கத்தில் கூட்டல், கழித்தல் போன்ற பணிகளையே அது செய்தது. இயந்திர மூளை எனத்தகும் கம்ப்யூட்டருக்கு இதுவே முன்னோடியாகும். 1890-ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின் போது தான், முதன்முதலாகக் கூட்டல் எந்திரத்தைப் பயன்படுத்தினர். முழுதும் மின் கருவிகளைக் கொண்டே இயங்கும் கம்ப்யூட்டர் இப்போது பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய பணிகளோடு, நாம் கொடுக்கும் செய்திகளையும் கம்ப்யூட்டர் சேமித்து வைத்துக் கொள்கிறது. தேவையானபோது அச்செய்திகளை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். பல்லாயிரக்கணக்கான செய்திகளைத் தன்னுள் அடக்கிக்கொள்ளும் இது ஒரு மாபெரும் சக்திவாய்ந்த சாதனம். நாட்கணக்கில் அமர்ந்து போட வேண்டிய சிக்கலான கணிதங்களைக் கூட வெகு விரைவில் போடும் வியத்தகு திறமை கம்ப்யூட்டருக்கு உண்டு. ஆனால் கம்ப்யூட்டரிடமிருந்து வேலை வாங்குதற்கு முன்னர் முறையாகவும், சரியாகவும், குறித்த காலத்திலும் நாம் அதற்கு செய்திகளைக் கோர்வைப்படுத்திக் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில், நாம் என்ன செய்யச் சொல்லுகிறோமோ, அதனை மட்டும் செய்து கொடுக்கும் திரமை இந்த எந்திர மூளைக்கு உண்டு. தானாகச் சிந்தித்து செயல்படாது. இதுவே மனித மூளைக்கும், இதற்கும் உள்ள வேறுபாடு ஆகும். ஆயினும் செய்திகளைச் சேமித்து வைத்துக் கொள்வதானலும், குறிப்பிட்ட பணிகளை விரைவில் செய்து தருவதனாலும், கம்ப்யூட்டர்களை அறிவியல் ஆய்வுக் கூடங்களிலும, வங்கிகளிலும், பெரும் வணிக நிறுவனங்களிலும் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகளில் கம்ப்யூட்டர்களை பரவலாகப் பயன்படுத்துகிறார்கள்.

## (2) கங்கை நதியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் என்ன?

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றி வணங்கப் பட்டு வரும் கங்கை ஆறு இமயத்தின் உச்சியிலிருந்து 2525 கிலோ மீட்டர் பயணம் செய்து வங்கக்கடலில் கலந்து விடுகிறது. உலகின் மிக நீளமான நதிகளில் ஒன்றான கங்கைக் கரையில் அரித்வார், வாரணாசி, பாட்னா, கல்கத்தா போன்ற பெருநகரங்கள் அமைந்துள்ளன. மிகவும் தொன்மையான இந்த ஆறு கழிவு நீர்ச் சாக்கடையாக மாறி வருகிறது. இதன் தூய்மை கெடுதற்குப் பல காரணங்கள் உள்ளன. அரைகுறையாக எரிக்கப்பட்ட சடலங்களை ஆற்றினுள் தள்ளி விடுகிறார்கள். முழுப்பிணங்களும், பிராணிகளின் சடலங்களும் கூட ஆற்றில் மிதந்து வருகின்றன. பத்துப்பன்னிரண்டு நகரங்களின் கழிவு நீரும், சாக்கடையும் வழி நெடுகிலும் அப்படியே கங்கையில் கலந்து விடுகின்றது. அண்மைக்காலந் தொட்டு, மிகப் பெரிய இரசாயன ஆலைகளின் நச்சுத்தன்மை பொருந்திய கழிவு நீரும் சேருகின்றது. பல்வேறிடங்களின் கங்கையாற்றின் கரையினையே பல்லாயிரக்கணக்கான மக்கள் கழிப்பிடமாக பயன்படுத்துகின்றனர். மனித உடலும், மிருகங்களின் உடலங்களும், பிற தாவரக் கழிவுப் பொருளும் ஆற்றில் கலந்து வரும்போது, மீன் பாம்பு போன்ற நீர் வாழ் உயிரினங்கள் அவற்றினால் பாதிக்கப்படுவதில்லை. இரசாயன கழிவுப்பொருளால் மீனினமும் அழிந்து விடுகின்றது.

1980-ஆம் ஆண்டுக்கு முன்னர் அரித்துவாரில் கங்கையின் இடுப்பளவு நீரில் குளிக்கும்போது கூட கீழே கிடைக்கின்ற மணலும் கூழாங்கல்லும் தெளிவாகத் தெரியுமாம். இப்போது அந்த நிலையில் இல்லை. கல்கத்தா நகரின் ஒரு புறமாகச் சென்று கொண்டிருக்கும் கங்கையைப் பார்த்தால், சாணத்தைக் கரைத்து விட்ட கலங்கிய அழுக்கு நிலையில் நீர் காணப்படுகிறது.

எனவேதான் கங்கையின் தூய்மையினைப் பாதுகாத்தற் பொருட்டு இந்திய அரசினர் நாற்பது கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார். திட்டமிட்ட பாதுகாப்பு இல்லாவிட்டால், கங்கையின் தூய்மை மேலும் கெடுவதோடு, எந்த நிலையிலும் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லாமல், காலப்போக்கில் மணல் படிந்து தூர்ந்தும் போய்விடும். இயற்கை அன்னையின் மடிமீது தவழ்ந்து கங்கோத்ரி

யாக வரும் இந்த ஜீவநதியைப் பாதுகாக்கும் செயல் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளுவதற்கு ஒப்பாகும்.

(3) ஆந்தை தீயநிமித்தம் காட்டும் பறவையா?

புராணங்களிலும், நாட்டுப்புற வழக்கிலும், இலக்கியங்களிலும் விரும்பத்தகாத பறவையாக ஆந்தை கருதப்படுகிறது என்பது உண்மைதான். இருப்பினும் இது மூட நம்பிக்கையே தவிர, விஞ்ஞான ரீதியான உண்மை அன்று இரவில் பறந்து திரியும் பறவை என்பதுவும் அதன் அலறல் செவிக்கு இனிமையாக இல்லாமையும், உருண்டு திரண்ட அதன் பெரிய கண்கள் அழகாக இன்றி அகோரமாக இருப்பதுவும் ஆந்தையைப் பற்றிய மூடநம்பிக்கைக்குக் காரணங்களாகும்.

கிரேக்க புராணங்களில் வரும் எத்தேனே (Athene) போர், சமாதானம், ஆற்றல், அறிவு ஆகியவற்றுக்குரிய பெண் தெய்வம். இத்தெய்வத்துக்கு உகந்ததும், அடையாளப் பறவையுமாக இருப்பது ஆந்தை. அறிவுக் கூர்மையுள்ள பறவையாகத்தான் கிரேக்க புராணங்களில் ஆந்தை பேசப்படுகிறது. ஆந்தையைப் போல் அறிவுக் கூர்மை உடையவன் என்பது கிரேக்க வழக்கு. ரோமானியர்கள்தான் ஆந்தையைத் தீயநிமித்தம் காட்டும் பறவையாகக் கருதினர். அந்த மரபு பிற்றைக் காலத்தில் வெளி நாடுகளிலும் பரவி விட்டது.

மனிதனுக்கு எந்த விதத் தீங்கும் செய்யாத இந்தப்பறவை பயிர் பச்சைகளை அழித்து விடும் எலி, வெட்டுக்கிளி, குருவி ஆகியவற்றைக் கொன்று தின்னும் தன்மை உடையது. ஆந்தையின் இச்செயல் வேளாண் மக்களுக்கு நன்மை தருவதேயாகும். மனிதப் பார்வையினும் கூர்மையானது ஆந்தையின் கண் பார்வை. ஆந்தை உருட்டி விழிப்பதனால் எந்த இரையும் அதன் கண்களுக்குத் தப்ப முடியாது. அதன் உடல் மிகவும் மெல்லிய இறக்கைகளினால் ஆனாது. எனவே சலனம் இல்லாமல் பறந்து தனது இரையினைக் கால் நகங்களால் கவ்வி விடும். வவ்வால், எலி, காகம், குருவி போன்ற சிறு பறவைகளை கடித்து நகங்களால் கிழித்து விழுங்கி விடும். செரிக்க முடியாத உரோமப்பகுதி, எலும்பு, நகம் ஆகியன மலத்துடன் கழிவுப் பொருளாக வெளிவந்து விடும். மரப்பொந்துகளில் வாழும் தன்மையது. தீயநிமித்தம் காட்டும் பறவை அல்ல.

### (4) செவ்வாய்க் கிரகத்தில் உயிர்ப் பொருள்கள் உள்ளனவா?

விஞ்ஞான உலகத்தின் தொலை நோக்குக் கண்ணாடி (Telescope) செவ்வாய்க் கோளினை நோக்கி திருப்பப்பட்டுள்ளது. அங்கு உயிர் வாழ் பொருள்கள் உண்டா இல்லையா என்பது பற்றி முடிவான பதிலைக் கூற முடியவில்லை. உயிர்கள் வாழ்வதற்குத் தேவையான நல்ல காற்றும், நீரும் அங்கு இல்லை. 1976 - ஆம் ஆண்டு இரண்டு வைகிங் விமானங்களை அனுப்பி அறிவியல் சோதனை நடத்திப் பார்த்தனர். அங்கிருக்கும் மண்ணைக் கொண்டு வந்து அதனுள் உயிர்பொருள்களைப் பாதுகாக்கும் தன்மை இருக்கிறதா என்றும் ஆய்வு நடத்தினர். இருப்பினும் எந்த முடிவும் கூறுதற்கில்லை.

### (5) புழு பூச்சிகளைச் செடிகள் தின்னுமா?

எல்லாச் செடிகளும் தனிச் சேர்க்கையினால் தங்கட்கு வேண்டிய உணவைத் தயாரித்துக் கொள்கின்றன. இதனோடு சில நைட்ரஜன் போன்ற உயிர்ச்சத்துக்களும் அவைகட்கு தேவை. மண்ணில் இருக்கும் பாக்டீரியாக்களே செடிகளுக்கு நைட்ரஜன் சத்தைக் கொடுப்பதற்குக் காரணமாக உள்ளன. சிவப்பு நிலங்களிலும் காரமான மண்வகை உள்ள இடங்களிலும் பாக்டீரியாக்கள் வாழ முடியாது. செடிகளுக்கு வேண்டிய உயிர் சத்து கிடைக்காவிடில் பசுமையாக இருக்க வேண்டிய செடிகள் வெளிர் நிறமாகவும், பழுப்பு நிறமாகவும மாறி உதிர்ந்து வடும். இப்படி நைட்ரஜன் கிடைக்காத இடங்களில சிற்சில செடிகள அங்கு வாழும் புழுபூச்சிகளைத் தின்று தங்கட்கு வேண்டிய நைட்ரஜன தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றன. புழுபூச்சிகளில் நைட்ரஜன் சத்து நிறைய உண்டு. இப்படி உயிரினங்களைத் தின்னும் செடிகள் Tropical காடுகளில் உண்டு. ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளிலும் குடம் போன்ற அமைப்புடைய pitcher plant உண்டு. இதிலிருந்து வரும் இனிய வாசனையில் மயங்கி பூச்சிகள் உள்ளே சென்றதும், சுரசுரப்பான உட்பகுதியில் சிக்கி அவை மாண்டுவிடும். Venus fly trap, sun dew போன்ற செடிகளும் இவ்வகையைச் சார்ந்தனவே.

# மொழி பெயர்ப்பு நூல்கள்

மனித குலம் ஒன்றே; உலக மக்கள் அனைவரும் நமது உலகினரே என்னும் உயரிய கருத்து கொள்கை அளவில் போற்றப் படுகின்ற காலம் இது. இக்கருத்தினைச் செயற்படுத்துகின்ற பணியினை மொழிபெயர்ப்பு நூல்கள் செய்து வருகின்றன. இவை இல்லையாயின், உலகின் மிகச்சிறந்த இலக்கியங்கள் அந்தந்த மொழி இலக்கியங்களாக மட்டுமே ஒரு வரையறைக்குள் நின்று போகும். இப்போதோ அவை வேறு வேறு மொழிகளில் பெயர்க்கப் பட்டு உலகை வலம் வருகின்றன. தலைசிறந்த இலக்கியப் படைப்புகளின் மொழி பெயர்ப்புப் பற்றிய ஒரு புள்ளி விவரம் ஐக்கிய நாடுகளின் சபை வெளியிட்ட (UNESCO) ஒரு குறிப்பிலிருந்து தெரிகிறது. சோவியத் பெருந்தலைவர் லெனின் எழுதிய நூல்கள் 370 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. கிறித்தவ வேதமாகிய பைபிள் தான் அதிகப்படியான மொழிகளில் பெயர்த்து எழுதப்பட்டுள்ளது என்று சொல்வது வழக்கம். இந்தக் குறிப்பின்படி 202 மொழிகளில் தான் பைபிள் காணப்படுகிறது. அதற்கு அடுத்த நிலையில் வருவது அகாத்தா கிறிஸ்டி அம்மையாரின் ஆங்கில துப்பறியும் நாவல்கள். இவைகள் 216 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. இந்த அம்மையார் அண்மைக் காலத்தில் தான் காலமானார். ஆங்கில நாட்டு நாடக ஆசிரியராகிய வில்லியம் ஷேக்ஸ்பியரும், டால்ஸ்டாயும் எழுபதுக்கு மேற்பட்ட மொழிகளிலும், டால்ஸ்டாய் டாஸ்டாய்வ்ஸ்கி, சார்லஸ் டிக்கன்ஸ், மாக்ஸிம் கார்க்கி ஆகியோர் அறுபதுக்கு மேற்பட்ட மொழிகளிலும் பெயர்த்து எழுதப்பட்டுள்ளனர். சார்லஸ் டிக்கன்ஸ் சென்ற நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் வாழ்ந்த ஒரு புகழ்பெற்ற நாவலாசிரியர். ஏனையோர் அனைவரும் ரஷ்ய நாட்டைச் சார்ந்தோர் மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' ஆகிய மிக நீண்ட புதினங்கள் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன.

— Index Translationum.

# கடல் கடந்த கண்ணன்

பி.ஆர்.ஸ்வாமி

நியூயார்க்கின் பவேரி பகுதியில் பிரபுபாதர் தங்கிக்கொண்டு பஜனை செய்து வருவதும், ஒரு சில அமெரிக்கர்களும் அங்கு சென்று அவருடன் கிருஷ்ண கானம் இசைப்பதும் பரவலாக அனைவருக்கும் தெரிய வந்தது. 'தி வில்லேஜ் வாய்ஸ்' என்னும் பத்திரிக்கையில் பிரபுபாதரின் புகைப்படமும், ஒரு சிறு குறிப்பும் வெளி வந்தது. அதனை வெளியிட்ட ஹேவார்டு மர்பி எனும் நிருபரே ஒருநாள் நேரில் வந்தார். சுவாமிகளோ சம்மணம் போட்டு அமர்ந்து தனக்குப் பின்னால் இருந்த புத்தக அல-மாரியில் லேசாகச் சாய்ந்து கொண்டு எந்தவித பரபரப்பும் இன்றி சாவதானமாகக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்துக் கொண்டிருந்தார். இந்திய நாடு அதன் பண்பாடு அந்நாட்டுச் சாமியார்கள் குறித்து தனக்கு அதிகம் தெரியாது என்றார் ஹோவார்ட் மர்பி. தானே எழுதியும், மொழி பெயர்த்தும் இந்தியாவிலேயே வெளியிட்டிருந்த சில நூல்களைத் தருகிறேன். என்று பக்திவேதாந்தர் சொன்னார். மர்பிக்கு வியப்பு! இந்தப் பெரியவர் இறைவன் பெயரைச் சொல்லி ஏதே மாய மந்திரம் செய்பவர் அல்லர்; கல்வி கற்று, அனுபவம் முதிர்ந்து தத்துவார்த்தமாகப் பேசும் ஒரு ஆன்மீக அறிஞர் என்றே மகிழ்ந்தார். பிரபுபாதரைப் பற்றி அவர் கூறும் பகுதி இதோ! "நான் விளக்கம் கேட்டதற்கெல்லாம் அமைதியாகவும் சரளமான ஆங்கிலத்திலும் பதில் வந்தது நெற்றியிலிருந்து மூக்கு வரை நீண்டிருந்த வெள்ளைக் கோடு, மணிமாலை, உடம்பின் மேல் போர்த்தியிருந்த வெள்ளையான முரட்டுதுணி, ஆகியவைப் பற்றியும் நான் அவரிட மிருந்தும் விளக்கம் பெற்றுக் கொண்டேன். உலகம் முழுவதும் உள்ள கோவில்கள் பிற வழிபாட்டுத் தலங்கள் ஆகியன குறித்து நிறையச் செய்திகளையும் அவர் கூறினார்."

மர்பி வந்து போன பிறகும் அமெரிக்கச் சீடர்களின் எண்ணிக்கையில் பெரும் மாற்றம் ஒன்றும் நிகழவில்லை. வழக்கம் போலத்தான் எழுதிய கடிதங்களுக்கு எல்லாம் இந்தியாவிலிருந்தோ மத்திய அரசினரிடமிருந்தோ சரியான பதில் இல்லை. பிரபுபாதர் ஒருநாள் இதையெல்லாம் எண்ணி சோர்வுற்று அமர்ந்திருந்த

போது மின்னலைப் போன்று திடீரென்று ஒரு எண்ணம் பளிச்சிட்டது. தமது குழப்பத்தை நீக்கித் தெளிவு புகட்டுவதற்கென்று கண்ணனே அந்த சிந்தனையை அருளிச் செய்தான் என்றே அவர் நம்பினார். அன்றாடம் கிருஷ்ணகானம் இசைத்து வழிபாடு செய்ய வரும் அமெரிக்க ஆடவர் மகளிர் ஆகிய இருவரிடம் அப்பொறுப்பினை விடுவதே அந்த எண்ணம். கிருஷ்ணாய இயக்கம் அமெரிக்காவில் வேரூன்ற வேண்டுமானால், நிதி உதவிக்கு இந்தியாவை எதிர்நோக்கி இராமல், அமெரிக்காவிலேயே ஏற்பாடு செய்து கொண்டால் அதுவும் ஒரு வகையில் பொருத்தம் தானே! தனக்கு ஏற்பட்ட எண்ணத்தையும் தான் செய்துள்ள முடிவினையும் சுமதி மொரார்ஜிக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதத்தில் எழுதினார்.

"அகில உலகக் கிருஷ்ணாய இயக்கம் என்னும் அமைப்பினை இங்குள்ள நண்பர்களின் துணையோடு ஏற்படுத்திக் கொண்டுள்ளேன்".

தன்னை விரும்பி வந்து பழகும் அமெரிக்க இளைஞர்கள் அனைவரிலும் டேவிட் ஆலன் எனும் இளைஞரையே அன்றாட அனுட்டானங்களிலும், வழிபாட்டு முறையிலும் ஒரு பரம பக்தனாகவும், வைணவனாகவும் மாற்றிவிட எண்ணிக் கொண்டிருந்தார். அந்திய காலத்தில் இந்தியாவுக்குத் திரும்பி விட்டால், அமெரிக்க மண்ணில் அந்தப் புனிதப் பணியை பொறுப்புடன் கவனித்துக் கொள்ளவும் ஆலனே தகுதியானவர் என்பதே அவர் கணிப்பு. அதற்கேற்றவாறு டேவிட் ஆலனை இந்தியாவுக்கும் அழைத்துச் சென்று கண்ணனின் பிறப்புத்தலமாகிய பிருந்தாவனத்தில் ஆலய வழிபாட்டு முறையினைப் பழக்கி விடவும் திட்டமிட்டிருந்தார். ஆனால் நிலைமைகள் வேறு விதமாக மாறிவிட்டன. சுவாமிகளோடு பழகுவதற்கு முன்னமேயே ஆலன் மிகக் கொடிய மதுப்பழக்கங்களுக்கும் போதைப் பொருட்களுக்கும் அடிமைப்பட்டிருந்தவன் இத்தீய செயல்களினின்றும் விடுபடவேண்டும் என்று சுவாமிகள் தொடர்ந்து அறிவுரை கூறியும் அவன் அதை ஏற்றுக் கொண்டபாடில்லை. மிதமிஞ்சிய குடியினாலும், போதை மாத்திரை உட்கொண்டதனாலும், ஆலனுக்கு ஒரு சமயம் பைத்தியமே பிடித்து விட்டது. தான் செய்யும் காரியங்கள் என்னவென்றே அவனுக்குத் தெரியவில்லை. சுவாமிகளின் சிறிய அறைக்குள் புகுந்து தொடர்பில்லாமல் பேசிக் கொண்டிருந்தான். வன்முறைச்

செயலில் ஈடுபட்டு விடுவானோ என்று சுவாமிகள் வெளியே வந்து விட்டார். மீண்டும் அறைக்குள் போக அச்சம்; தெருவிலேயே நின்று கொண்டிருந்தார்.

அமெரிக்காவுக்கு வந்து ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டன. பண நெருக்கடி ஒன்றைத்தவிர இந்தியாவில் வேறெந்தப் பிரச்னையும் இல்லை. அமெரிக்காவிலோ ஒரு புதுப்பிரச்னை. இனி எங்கு போவது? டாக்டர் மிஸ்ராவின் இருக்கைக்குப் போக-லாம். ஆயினும் உள்மனம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. மொரார்ஜி கப்பல் கம்பெனியில் சென்று வேண்டிக் கொண்டால், எப்போது வேண்டுமானாலும் இந்தியாவுக்குக் கப்பல் பயண அனுமதி கொடுத்து விடுவார்கள். அதற்கும் உள்ளம் ஒத்துழைக்க-விட்டு. பக்தி சித்தாந்தரிடம் கூறிய வாக்குறுதியினை நிறை-வேற்றியே தீர வேண்டும் என்னும் எண்ணமே வலுப்பெற்றது. முன்வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது என்னும் உறுதி தளர-வில்லை.

"என்னுடைய பாதுகாப்பில் நீ பணி புரிகிறாய்; எனவே நீ செய்யும் அனைத்துக்காரியங்களிலும் என்னையே நம்பு. வாழ்க்கையில் எதிர்ப்படும் எந்தத் தடைகளையும் எனது ஆசியினால் தகர்த்து விடலாம்" என்னும் கீதையின் வாக்கியங்கள் நினைவில் நின்றன. இனம் புரியாத ஒரு தெம்பு பிறந்து விட்டது. சுவாமிகள் நேராக ஒரு தொலைபேசியை நோக்கிச் சென்றனார். யாரிடமோ பேசினார்.

மாலை நேரங்களில் கிருஷ்ண பஜனைக்கு வரும் காரல் கியர்ஜென்ஸ் கணீரென்ற குரலில் பதில் சொன்னார். எதற்கும் கவலைப்படாமல் தற்காலிகமாகத் தன்னுடைய இருக்கையிலே தங்கிக்கொள்ளலாம் என்பதே பதில். காரலின் மனைவி ஈவா காரலும் சுவாமிகளின் வருகை பற்றி மகிழ்ச்சி அடைந்தார். பவேரியிலிருந்து ஐந்தாறு தெருக்களுக்கு அப்பால் சைனா டவுன் என்னும் பகுதியே இந்தப் புதிய இருப்பிடம். இங்கிருந்து கொண்டே ஒரு வாரத்திற்குள் சுவாமிகளுக்கு ஏற்ற இடமாக பார்க்க வேண்டும் என்பது காரலின் திட்டம். மாலை நேர பஜனைக்கு வரும் மைக்கேல் கிரான்டும் சுவாமிகளின் தேவையை உணர்ந்து

உதவி செய்ய முன் வந்தார். பத்திரிகையில் வரும் விளம்பரங்களைப் பார்த்து இரண்டாவது அவென்யூ. கடைத்தெருப் பகுதியில் பஜனைக்கும், சொற்பொழிவுக்கும் ஏற்ற ஒரு விசாலமான கூடமும், அதன் பின்புறத்தில் அடக்கமான சிறு அறையும் கொண்ட ஒரு இடத்தை ஏற்பாடு செய்தனர்.

இரண்டாவது அவென்யூவில் இந்தப்புதிய இருக்கையினை ஏற்பாடு செய்து கொடுத்தவர் கார்டினர். சுவாமிகள் இந்திய நாட்டிலிருந்து வந்த ஒரு வடமொழி அறிஞர் என்பதை அறிந்த அவர் பெரிதும் மகிழ்ச்சியுற்றார். சுவாமிகளும் தான் வெளியிட்டிருந்த பாகவதம் - முதல் மூன்று பாகங்களின் மொழிபெயர்ப்பை கார்டினருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். கிருஷ்ணாய இயக்கத்தின் திட்டம் பற்றிக் கேள்வியுற்ற கார்டினர் தானும் அந்த இயக்கத்தில் சேர்ந்து மாதச் சந்தா 20 டாலரைச் செலுத்தி விடுவதாகவும் உறுதியளித்தார். தாம் மேற்கொண்ட பணியில் சற்றே அயர்வுற்றிருந்த பிரபு பாதருக்குக் கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது. சற்றுத்தாமதம் ஆயினும், சிக்கல்கள் தோன்றினும் எடுத்த காரியத்தை இனிதே முடிக்கலாம் என்று மகிழ்ச்சியுற்றார்.

இரண்டாவது அவென்யூவில் இந்தப்புதிய கட்டிடத்துக்கு மாத வாடை 200 டாலர். இந்தத் தொகையை கார்டினரும், கிரான்ட்டும், காரல் கீயர்ஜென்னும் இன்னும் ஒரு சில நண்பர்களும் பகிர்ந்து அளிப்பதென்று முடிவு செய்தனர். குறிப்பிட்ட ஒரு நாள் இவர்கள் அனைவருமே பவேரி பகுதிக்கு வந்து சுவாமிகளின் பழைய இடத்தைக் காலி செய்தனர். புத்தக மூட்டை, கைப்பெட்டிகள், துணிமணி ஆகிய அனைத்தையும் ஆளுக்கு ஒன்றாகச் சுமந்து கொண்டே வந்து இரண்டாவது அவென்யூவில் சுவாமிகளைக் குடி அமர்த்தினர். சைதன்யர் திருநாமத்தை மனதில் எண்ணி பிரபுபாதர் செய்யும் சங்கீத வழிபாடும், பிரார்த்தனைக் கூட்டமும் இனித் தடையின்றி நடக்கும் என்பது உறுதியாகிவிட்டது.

சுவாமிகள் தங்கியிருந்த கட்டிடம் போக்குவரத்து நிறைந்த பகுதி. சர் சர் என்று போகும், கார்களும், சரக்கு ஏற்றிவரும் லாரிகளும் கிழக்கு மன்காட்டன் பகுதியிலிருந்து வந்து திரும்பும் போது கிளம்புவதினால் சப்தத்துக்கும், புகைக்கும் எந்த நேரத்-

திலும் குறைச்சல் இல்லை. ஆனால் பிரபுபாதர் தங்கியிருந்த மாடிப்பகுதி சற்றே உள்ளடங்கி இருந்தது. மிக எளிய அறை. பெயின்டு மங்கிப்போன ஒரு தகரப்பெட்டி மீது பழைய டைப்ரைட்டர். எதிரில் ஒரு சிறிய அலமாரியில் துணிகள். தகரப்பெட்டிக்கு அருகில் பழந்துணியால் கட்டிய ஒரு புத்தக அடுக்கு. காவித்துணியால் போர்த்திக்கட்டப்பட்டிருந்த கையெழுத்துப் பிரதியும் ஒரு சிறிய மூட்டை. சுவாமிகள் அமரும் இடத்துக்கு எதிரில் இந்தியாவிலிருந்து கொண்டு சென்றிருந்த ஒரு காலண்டர். வழவழப்பான அந்த மூவண்ணக் காலண்டரில் கண்ணன் ஒரு அழகான பசுவின் மீது சாய்ந்து நர்த்தன நிலையில் குழலூதிக் கொண்டு நிற்பது போன்ற படம். அருகில் ஒரு சிறிய அறையில் சைதன்யரின் உருவப்படம். திருமால் அனந்த சயனனாக இருக்கின்ற காட்சி. இது பிறிதோர் படம். இங்கு தான் இசையும் வழிபாடும் நடத்த வேண்டும். இந்த இரண்டு அறைகளுக்குப் பின்னால் குளியல் அறையும், சமையற் கட்டும் இருந்தன. அடுத்தமாத வாடகைக்கு வழியில்லை. இருப்பினும் பக்தி வேதாந்தர் சில அன்பர்களின் துணை கொண்டு இறைவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு வடக்கு அவென்யூவின் இந்தச் சிறிய இருக்கையில் குடியேறி விட்டார்.

வடக்கு அவென்யூவின் கிழக்குப் பகுதியில் சற்று வாடகை குறைவு. அமெரிக்காவில் அண்மையில் குடியேறிய கிழக்கு ஐரோப்பிய நாட்டுக் காரர்களே பரவலாக இந்தப் பகுதியில் தங்கி இருந்தனர். அமெரிக்கர்களிலேயே மத்திய தர வாழ்க்கையில் சலிப்புற்று சுதந்திரமாகவும், இயற்கையாகவும், எளிமையாகவும் வாழ வேண்டும் என்கிற ஒரு இளைஞர் கூட்டமும் இந்தப்பகுதியில் அங்கும் இங்குமாகத் தங்கிக்கொண்டிருந்தனர். மிதமிஞ்சிய செல்வமும், ஆடம்பரமான வாழ்க்கையும் அவர்களுக்குச் சலித்துப் போய் விட்டது. கட்டுப்பாடும், ஒழுங்கும், நியதியும் அவர்களுக்கு ஒரு இனம் புரியாத வெறுப்பினை அளித்தது. இவற்றிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி அன்றாடச் சமூக வாழ்க்கையிலிருந்து விலகி மனம் போன போக்கில் வாழ்வது தான். தாடிமீசையும் வளர்த்துக் கொண்டு போதை மருந்துகளுக்கும் ஆட்பட்டு ஆண்டிகளைப் போலப் பரதேசியாய்த் திரிந்த இவர்கள் தான் பின்னர் 'ஹிப்பிகள்' என்று அழைக்கப்பட்டோர். இந்த ஹிப்பிகள் கூட்டமும் வடக்கு அவென்யூவின் கிழக்குப்பகுதியில்

ஏராளம். 1966 - ஆம் ஆண்டு தொடக்கத்தில் அமெரிக்க இளைஞர்களின் ஒரு பகுதியினர் கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று திரிவதை பிரபுபாதர் பார்த்தார். செல்வச்செழிப்பு மிகுந்த அமெரிக்க மண்ணில் இப்படி ஒரு நிலையா? மன நிம்மதி வேண்டும் என்றும் போதைப் பொருளுக்கு அடிமையாகின்ற இந்த மக்கட் கூட்டத்தைக் காப்பாற்ற முடியாதா? ஆனால் ஒன்று மட்டும் உறுதி. பணமும், ஆடம்பரமும், தரமான வாழ்க்கை வசதிகளும் மனநிறைவினைக் கொடுக்க முடியாது என்பதே அது. இறை நம்பிக்கையும், தெய்வீக வழிபாடும், ஆன்மீக சிந்தனையுமே எந்த நிலையிலும் மனித குலத்தினை வாழ்விக்கும் தன்மையன. நிம்மதிக்கு அடிப்படை அதுவே. எனவே கண்ணனை மையமாகக் கொண்ட ஆன்மீக இயக்கத்தை அமெரிக்க மண்ணில் தொடங்கி அகில உலகெங்கணும் வளர்க்க வேண்டும் என்று உறுதி கொண்டார் பிரபுபாதர்.

புதிய இருக்கைக்கு வந்து ஒரிரு வாரங்கள் ஆகி விட்டன. ஐந்தாம் தெருவில் உள்ள தனது நண்பன் ஒருவனைப் பார்ப்பதற்காக ஒரு இளைஞன் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தான். நடைபாதையில் தனக்கு எதிராக காவியுடை தரித்த ஒரு பெரியவர் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் வந்து கொண்டிருப்பதைப்பார்த்தான். நெருங்கி வந்ததும் இருவருமே நின்று விட்டனர். ஹோவார்டு மர்பி என்னும் அந்த இளைஞன் 'தாங்கள் இந்திய நாட்டுக் காரரோ' என்று பேச்சைத் துவக்கினான். 'ஆம்' என்று தலை அசைத்தார் சுவாமிகள். ஒரு சில வாரங்களுக்கு முன்னர் தான் மர்பி இந்தியாவிலிருந்து திரும்பி வந்திருந்தான். ஒகையோ பல்கலைக்கழகத்தில் ஆங்கில ஆசிரியனாகப்பணி புரிந்தாலும், இந்திய நாட்டுக் கலாச்சாரம், தத்துவம் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் கொண்டிருந்தான். சுவாமிகளைச் சந்தித்தது நல்ல வாய்ப்பாக அமைந்து விட்டது. வாரம் மூன்று முறை நடத்தத்திட்டமிகுந்த பகவத் கீதை வகுப்புக்குத் தான் மட்டுமன்றி, தன்னுடன் தங்கி உள்ள வேறு சில நண்பர்களையும் அழைத்து வர உறுதி அளித்தான். பவேரி பகுதியின் பழைய சீடர்கள், பாரடாக்ஸ் தேநீர் விடுதியில் சுவாமிகளைச்சந்தித்தோர், மர்பியின் நண்பர்கள் என்று ஒரு புதிய யுகத்தின் இளைஞர்குழாம் சுவாமிகளின் உபன்னியாசத்தைக் கேட்கக் கூடினர்.

(தொடரும்).

## கம்பன்

— ப. முத்துசாமி, எம். ஏ

தெள்ளு தமிழ்க்கொரு காவியந் தந்திடத்
    தேவன் அனுப்பிய தூதுவன்
அள்ளு கனிச்சுவை துள்ளி யெழுந்திட
    வெள்ளக் கவிதரும் மாதவன்

உள்ள மலரினில் கள்ளை யருந்தியே
    உண்மையின் தேன்தரும் ஈயவன்
துள்ளு நடையினில் விள்ளு சுவையினில்
    உள்ளம் பிணித்திடுந் தூயவன்.

கற்புக் கனியினைக் காவியச் சோலையில்
    கண்டு சிறைவைத்த இராவணன்
வெற்புறும் தோளன் இராமனின் வில்லினை
    வெற்றிச் சிறைவைத்த வீரனாம்

அற்புதத் தீந்தமிழ்ச் செம்மையெல்லாம் சீதை
    அழகிற் சிறைவைத் தளந்தவன்
கற்பதற் கேற்ற கருத்தையெலாம் கொண்டோர்
    கதையிற் சிறைவைத்த கள்வனாம்

அரசியல் நுட்பமும் அறிவியல் ஒட்பமும்
    அறிவியல் திட்பமும் ஆய்ந்தவன்
விரசப் படாவகைக் காமச் சுவையையும்
    விரித்து விளக்கிடும் வித்தகன்

முரசம் முழங்கிடு தானைச் செருக்கையும்
    மொய்ம்பையும் பாட்டில் வடிப்பவன்
சரசம் செயவரும் மங்கை வடிவினைச்
    சந்தக் கவியில் வடிப்பவன்.

# நாடகவியல் எழுந்த சூழல்

— வி. சு. கோவிந்தன்,
எம். ஏ., எம். பி. எல்,

**முன்னுரை:** "எந்த விஷயத்தைப் பற்றியும் ஆராய்ந்து தெளிய அதை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அணுகுவதுதான் சீரிய முறை என்பது முடிவு"[1] என்பார் ஏ. வி. சுப்பிரமணிய அய்யர். வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் காலத்திற்கு முன்பும், சாஸ்திரியார் காலத்திலும் தமிழ் நாடகம் என்ன நிலையில் இருந்தது என்பதை அறிந்தாலே, அவர் இயற்றிய நாடகவியலைப் பற்றிய முழுமையான கண்ணோட்டம் கிடைக்கும். நாடகவியல் எழுந்த சூழலை அறிந்தாலன்றி நாடகவியலின் மதிப்பீடு முழுமையுறாது.

**பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் தமிழ்நாடகத்தின் நிலை:**

தமிழில் நாடகம் வளர்ந்த வரலாற்றைப் பதினெட்டாம் நூற்றாண்டு முடிய ஒரு கால கட்டமாகவும், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் வாழ்ந்த 1903 ஆம் ஆண்டு வரையிலான பகுதியை மற்றொரு கால கட்டமாகவும் கொள்ளலாம்.

தமிழ் நாடகத் தோற்றம் பற்றிய கருத்துக்கள் மாறுபாடு களுக்குரியனவாகவே விளங்குகின்றன. "பொதுவாக, எல்லா நாடுகளிலுமே நாடகக்கலை சமயச் சார்பான நடனங்களின்றும் பிறந்து வளர்ந்து வந்துள்ளது என்ற கருத்து முன்னர்க் கூறப்பெற்றது. தமிழ்நாடக வளர்ச்சியும் இதற்கு விதி விலக்கன்று"[2] என்பார் சக்திப் பெருமாள்.

"நாட்டியம் நடனம், நடிப்பு எனும் சொற்களோடு தொடர் புடையதாக நாடகம் என்ற சொல்லும் அமைகிறது"[3] என்பார் ச. வே. சுப்பிரமணியன்.

"நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்" (தொல், பொருள், அகத். நூற்பா 53) என்ற தொல்காப்பிய நூற்பாவில் நாடகம் எனும் சொல்லுக்குப் புனைந்துரை எனப்பொருள் கூறுவார் நச்சினார்க்கினியர்.

"பண்ணைத் தோன்றிய ......" (தொல். பொருள். மெய்ப் பாட்டியல், நூற்பா 1) என்ற தொல்காப்பிய நூற்பாவில் உள்ள 'பண்ணை' என்றசொல் பாடலால் ஆகிய நாடகத்தைக் குறித்திருக்கலாம் என்பார் ஏ.என். பெருமாள்.[4]

ஆயினும் பரிபாடலில்தான் முத்தமிழ் எனும் சொல் முதன் முதலில் குறிக்கப்படுகிறது சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, பெரும் பாணாற்றுப் படை ஆகிய நூல்களிலும், சங்க மருவிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும் நாடகம் என்ற சொல் பயின்று வந்துள்ளது. எனினும், சமயச் சார்புநீங்கிப் பொழுது போக்கு இயல்புமிக்கு நாடகப் போக்கினைப் பெற்ற நிலையைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன" என்பார் சக்திப்பெருமாள்.

சங்கமருவிய காலத்தில், வேத்தியல் பொதுவியல் என இரு நாடக வகைகள் இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது[5]. சிலப் பதிகாரத்தின் அரங்கேற்றுகாதை, நாடகம் அரங்கு நாடகாசிரியர், இசைக்கருவி, இயக்குநர் ஆகியோரின் இலக்கணத்தைக் கூறுகிறது'.

சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார், பரதம், அகத்தியம், பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல் முதலியன இறந்தன எனக் கூறுகிறார். பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணை யல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும்"[6] என்றும் குறிப்பிடுகிறார்.

ச. து. சு. யோகியார் 1968இல் கூத்த நூல் எனும் நாடக இலக்கண நூலைப்பதிப்பித்தார் தொள்ளாயிரம் நூற்பாக்களைக் கொண்டுள்ள தெனினும், முந்நூற்றியிருபத்திரண்டு நூற்பாக்களே முதல் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறாக,கிடைக்கும் நூல்களெல்லாம் இலக்கண நூல்களாகவே விளங்க நாடக இலக்கிய நூல் ஒன்று கூடக் கிடைக்கப் பெறவில்லை." கலை இன்னும் இலக்கிய வடிவம் பெறாத நிலையாக இதனைக் கருதலாம்" என்பார் ச.வே. சுப்பிரமணியன்.

இதற்குப்பின் சோழர்கள் காலம் வரை நாடகம் நலிவுற்றது. வட நாட்டிலும் நாடகக கலைஞர்களை வெறுத்து ஒதுக்கும் வழக்கம் வேரூன்றியது. அதன் தாக்கம் தமிழகத்திலும் பரவியது. கௌடில்யர் தமது அர்த்தசாஸ்திரத்தில் நாடகக் கலைஞர்கள் இழிந்தவர்கள் என்று கூறியுள்ளார்கள்.

தமிழகத்தில் அப்போது சமணமும் பௌத்தமும் வலுப்பெற்றுப் பெற்றிருந்தன. மன்னர்கள் நாடகக் கலைக்கு ஆதரவு அளிப்பதை அச்சமயங்கள் தடுத்தன. இதனைக் குறித்துச் சாஸ்திரியார்'', ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த ஆரியரும் சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகுகின்ற தென்ற போலக் கொள்கையுடையவராய்த் தமது நூல்களிற் கடியப்படு-பவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறினர். அக்காலத்திருந்த அரசர்களுக்குந் துர்போதனை செய்து நாடகத் தமிழைத் தலை-யெழ வெட்டாது அடக்கி வந்தனர். ஒளவையாரும் திருவள்ளு-வரும் ஒருங்கே புகழ்ந்த இல்லற வாழ்க்கையையே தீவினையச்-சத்தின் பாற்படுத்திக் கூறுஞ்சைனர்கள் நாடகத் தமிழைக் கடிந்-தது ஓராச்சாரியமன்று''7 என்று கூறுவார்.

நாடகத்தின் இன்றியமையாத அங்கங்களான இசையையும் நாட்டியத்தையும் சமணரும் பௌத்தரும் வெறுத்து ஒதுக்கவே நாடகம் மேலும் நலிவுற்றது. இவை மீண்டும் தழைத்தது சைவ வைணவ சமய மறுமலர்ச்சி நிகழ்ந்த சோழர்கள் காலத்திலேயே கல்வெட்டுக்களினால் அறியலாகும் அக்கால நாடகங்களைப் பற்றி சக்திப் பெருமாள் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் காலத்திலேயே நாடகத் தலைவன் திருமாவளவன் என அழைக்கப்பட்டான், கலைஞர்கள் நன்கு மதிக்கப்பட்டனர்.

பதினான்காம் நூற்றாண்டில் நடைபெற்ற மகமதியர் படையெடுப்பால் தமிழ் அரசர் தலைமுறைகள் மறைந்தன; நாட்டில் அமைதியும் குன்றியது. நாடகக்கலை மன்னர்களின் ஆதரவை இழந்தது. ஆயினும், பதினேழாம் நூற்றாண்டில் பொது மக்கள் இக்காலத்தில் புதிய வடிவம் கொடுத்தனர்.

மக்கள் கலையாக மீண்டும் மலர்ந்த நாடகம், பள்ளு, குறவஞ்சி, தொண்டி நாடகம், கீர்த்தனை நாடகம் எனப் பல்-

வேறு வகைகளாக வளர்த்தது. இவ்வகை நாடகங்கள் பாடல்களை அங்கமாகக் கொண்டு, அக்கால மக்களின் வாழ்வியலை விளக்குவனவாக அமைந்தன.

இவற்றுள் அருணாசலக் கவிராயரின் இராம நாடகமும், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரமும், திரிகூட ராசப்பக் கவிராயரின் திருக் குற்றாலக் குறவஞ்சியும் புகழ் வாய்ந்தவை.

தொண்டி நாடகம் மக்கள் பக்தியுணர்வை வளர்க்கப் பயன் பட்டது. "மக்கள் தெய்வத்தை எள்ளி நகையாடத் தயங்கினார்கள். செல்வர்களை எள்ளி நகையாடவோ முடியாது. ஏழை எளியவர்களான குற்றவாளிகளைப் பற்றிப்பாடி நகையாட முடியும்"[8] என்பார், மு. வரதராசன் மாரிமுத்துப்பிள்ளையின் தொண்டிநாடகம் புகழ் பெற்றதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்கூத்துக்கள் தலை தூக்கின. நாடகமேடை இல்லாமல், நடிகர் தெருக்களிலும், வெட்ட வெளிகளிலும், களத்து மேடுகளிலும் ஆடுவதே தெருக்கூத்து.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் ஜமீன்தார்கள், நிலச்சுவான்தார்கள் ஆதிக்கம் ஓங்கியது. மக்களுக்கு இறையுணர்வும் மிகுந்தது. நிலச்சுவான்தார்களின் ஆதரவுடன் இக்கூத்துக்கள் மழை பொழியவும் திருமணம் நிகழவும், மக்கட் பேறு பெறவும் விழாக் காலங்களில் நிகழ்த்தப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இக்கூத்துக்கள் கல்வியறிவு அதிகமற்ற பொதுமக்களால் நடத்தப்பபட்டன. பாமர மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட இதனை மற்றவர்கள் அறவே ஒதுக்கினர். காலப்போக்கில் இவை தரம் குறைந்தனவாக மாறின. நகைச்சுவை என்ற பெயரில் இருபொருள் பொதிந்த உரையாடல்களும். காமச்சுவை மிகுந்த காட்சிகளும் அமைக்கப்பட்டன.

தெருக்கூத்துக்களில் பாத்திரத்திற்குப் பொருத்தமற்ற ஆடைகளை அணிந்து நடித்தனர். இரவு பதினொரு மணிக்கு மேல் தொடங்கிப் பொழுது விடியும் வரை இவை நடத்தப்பட்டன.

தெருக்கூத்துக் கலைஞர்கள் காப்பியக் கதைகளை மனம் போனபடி திரித்தார்கள். சிலப்பதிகார மாதவி வேசையாகக் கருதப்பட்டாள்[9].

இக்கால கட்டத்தில் நாடகம் பற்றிய மக்கள் கருத்தினைப் பம்மல் சம்பந்த முதலியார்....... தமிழ் நாடகங்கள் ஜீவனத்திற்காக அவைகளை ஆடுபவர்கள் கையிற்பட்டு ஹீனஸ்திதியையடைந்ததாகும். அவைகளில் பெரும்பாலர் நன்னடக்கையில்லாதவர்களாயும் கல்வி அறிவு இல்லாதவர்களும் துன்மார்க்கர்களாயு மிருந்தபடியால் நாடகமாடுவதே நிந்தைக்கு ஆளாயது. ஒருவனை இழித்துச் சொல்லவேண்டியிருந்தால், 'அவன் கூத்தாடியாயிருக்கிறான்' என்று சொல்லத்தக்க ஸ்திதிக்கு வந்துவிட்டது. அக்காலம் ஏகதேசமாய் நடத்தப்பட்ட தமிழ் நாடகங்கள், குலஸ்திரீகள் பார்க்கத்தக்க வகையாய் நடத்தப் படவில்லை என்று உறுதியாய்க் கூறலாம். அன்றியும் மற்றொரு முக்கியமான காரணம்,கற்றறிந்தவர்கள் நடத்தத்தக்க நாடகங்கள் இல்லாமையே "என்று விளக்கிச் சொல்வார்.

## மறுமலர்ச்சி :

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில் இந்நிலை மாறத்தொடங்கியது. சாங்கிலி நாடகசபா முதலிய நாடக சபாக்களும், பார்சீ கம்பெனிகளும் தமிழ்மக்களுக்கு, நாடகக்கலையைப் புதுப்பிக்க ஆர்வம் ஊட்டின. தஞ்சாவூரைச் சார்ந்த கோவிந்தசாமி ராவ் என்னும் மகாராட்டிரர் மனமோகன நாடகக் கம்பெனி என்ற தமிழ் நாடகக் கம்பெனியைத் தொடங்கினார்.

இதைத் தொடர்ந்து நாடகமேடைகள் நிறுவப்பட்டன. கல்வியறிவு பெற்றவர்கள் ஈடுபாடு கொள்ளத் தொடங்க, நாடகத்தில் வசனங்கள் பெருகிப் பாடல்கள் குறைந்தன. தெலுங்கு வடமொழி வசனங்கள் நாடகத்தில் வருவதும் குறைக்கப்பட்டன. பின் பாட்டுடன் நடிகர் உச்சகுரலில் பாடுவதும் குறைக்கப்பட்டது. அறிவியல் வளர்ச்சியால் அரங்க அமைப்புக்களும் மாறின.

ஆங்கில மொழியறிவு பெற்ற பம்மல் சம்பந்த முதலியார் தமது சுகுணவிலாஸ் சபையை 1981 ஆம் ஆண்டு சுந்தரம் பிள்ளை

செய்யுளால் இயன்ற 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூலை வெளியிட்டார்,

இத்தமிழ் நாடக மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடிகளில் சூரிய நாராயண சாஸ்திரியாரும் ஒருவர்.

நாடகவியல் தோற்றம் :

பற்பல துறைகளில் புதுமை புரிந்த சூரிய நாராயண சாஸ்திரியார் நாடகக்கலையை உயர்நிலைக்குக் கொண்டுவரப் பெருமுயற்சி செய்தார். ஆங்கிலக் கல்வியும், வடமொழிப் பயிற்சியும் பெற்ற அவர், ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப்போல், காளிதாசன், பவபூதி நாடகங்களைப் போல் தமிழ் நாடகங்களும் படிக்கவும் நடிக்கவும் படவேண்டும் என்று விரும்பினார். நாடகத்தைப் பற்றிய தம்கருத்தை "நாடகத்தை நடித்துக் காட்டுதல் அதனை இயற்றுவோர்க்கு இன்றியமையாத துணைக்கருவியாகும். ......... ஆயினும் இங்ஙனம் நடித்தற் கருத்தின்றி வரையப்பட்டுள்ள நூல் கட்கு 'நாடக நூல்' என ஒரே வழிப்பெயர் வழங்குவதுண்டெனி னும் உள்ளவாறே நோக்குமிடத்து அவை நடிக்கப்படினன்றி அப்பெயரின் ஆகாவாதலின் அஃது உண்மையில் பொருத்தமில் பெயரேயாம்[11] என்று கூறுவார்.

தமிழ்நாடகம் தெருக்கூத்தாக விளங்கி நலிவதைத் தமது "தமிழ்மொழியின் வரலாறு' என்னும் நூலில் சாடியுள்ளார். 12. நாடகத்தை வெறும் பொழுது போக்குக் கலை என்ற நிலையிலிருந்து இலக்கியமாக உயர்த்த விரும்பினார்.

"தமிழர் மனப்பான்மை நாடக இலக்கியத்தைப்போற்றிக் காப்பாற்றுவதாக இல்லை என்று கூறுவதே பொருத்தமாக உள்ளது." 13. என்பர் மு, வரதராசன்.

தமிழ், வடமொழி, ஆங்கில நாடக இலக்கணங்களை அறிந்தவர்களால் சிறந்த நாடகங்களைப் படைக்கவியலும் என்று சாஸ்திரியார் கருதினார்." நாடக விலக்கணம் எத்துணையுமறியாத சில புல்லறிவாளர் தோன்றித் தாமும் நாடகமெழுதுவான் புக்குக்குன்று முட்டிய குரீஇப் போலப் பெரிதும் இடர்ப்பட்டு எழுதியதையும் வெளியிட வெள்கி மாழ்ந்து திரியா நின்றார். இப்போலிகள் நாடக

விலக்கணங்கற்றுத் தருக்கடங்கி யுறுதி கூடுதல் கருதியும், எந்தம் இயற்றமிழ் மாணவர்க்கு நாடகத் தமிழும் அறிவுறுத்தல் கருதியும் சூத்திரமும் உரையுமாக நாடகவிய லென்று தலைகுறியிட்டு ஆங்கில கீர்வாண வமைதிகளை யநுசரித்து ஒருநூல் செய்துள்ளோம்"[14] என்று கலாவதி நாடக முகவுரையில் கூறியிருப்பது ஆசிரியரின் எண்ணத்தை விளக்குகிறது.

இழிந்த நிலையில் உள்ள கூத்து உயர்ந்த நல்ல நாடகங்களாக வேண்டும். அதற்குத் தமிழ், வடமொழி, ஆங்கில அறிவு துணை செய்யும் என்று நம்பினார் சாஸ்திரியார். பிறமொழிகளில் உள்ள சிறப்பான மரபுகளின் வழியே, தமிழை வளர்க்க வேண்டும் என்று கருதினார். "சென்ற சில்லாண்டுகளாக, நாடகத் தமிழ் அறிவுடையோர் சிலரது உதவி கொண்டு தலையெடுத்து வளரா நின்றது இதற்கு வடமொழி நாடகப் பயிற்சியும் ஆங்கில நாடகப் பயிற்சியும் மிகப் பயன் படுவனவாயின. இவ்வாறு புதுவழியிற் புனையப் பட்டு வெளிப்படும் நாடகங்கள் இன்னும் அதிகரித்தல் வேண்டும். இவற்றை யொழுங்கு படுத்துதல் கருதி, யாம் 'நாடகவியல்' என்றதோர் இலக்கண நூல் செய்திருக்கின்றனம்[15]" என்று சாஸ்திரியார் கூறுகிறார்.

இலக்கியத்திறம் வாய்ந்த நாடகங்கள் எழ நாடகவியல் உதவும் என்று கருதினார் சாஸ்திரியார். எனவே, நாடகவியல் தாம் கூறும் இலக்கணங்களுக்கு ஏற்பத் தாமும் நாடகங்களை எழுதித் தமது மாணாக்கர்களையும் நாடகங்கள் படைக்கத் தூண்டினார். இவ்வாறு சாஸ்திரியார் தமிழ் நாடக மலர்ச்சிக்கு நாடகவியல் வழியே வித்திட்டார்.

முடிவுரை :

"பழையன கழிதலும் புதியன புகுதலுமாகிய இவ்விரண்டும் பாஷையியக்கத்திற்குரிய இரண்டுகால்களென மதிக்கப்படுகின்றன. இவ்வுண்மையை யுய்த்துணர்ந்து தமிழ்ப் பாஷையின்கட் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை யுடனே மேற்கொள்ளுதல் தமிழ் மக்கள் கடனாம்[16] என்று சாஸ்திரியார் கூறுவார். அத்தகைய சீர்திருத்த முயற்சியே நாடகவியலாக மலர்ந்தது.

1. க. கைலாசபதி, இலக்கியமும் திறனாய்வும், ப-122.
2. சக்திப் பெருமாள், தமிழ் நாடக வரலாறு, ப.9
3. ச.வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வகையும் வடிவம், பக். 590, 591
4. A.N. Perumal, "Dramatic Heritage of the Tamil" Cultural Heritage of the Tamil, p. 70.
5. சிலப்பதிகாரம், அரங்கேற்று காதை, வா. 39.
6. உ. வே. சாமி நாதையர் சிலப்பதிகாரமூலமும் மூலமும் அரும்பத வுரையும் அடியார்க்கு நல்லாருரையும். ப. 9.
7. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ் மொழியின் வரலாறு, ப. 52.
8. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 255.
9. மேலது, ப, 265.
10. ப. சம்பந்த முதலியார், நாடகத்தமிழ், ப. 84.
11. வி.கோ.சூ நாடகவியல், ப. 11.
12. வி.கோ.சூ தமிழ்மொழியின் வரலாறு, ப. 52.
13. மு.வ. மு. நூ., ப. 264.
14. வி. கோ. சூ கலாவதி, ப. 28
15. வி. கோ. சூ தமிழ்மொழியின் வரலாறு, ப. 55.
16. மேலது, ப. 138.

# காஷ்மீர சைவ சமயம் - அன்றும் இன்றும்

டாக்டர் C.L. ரெய்னா

இமயமலைப் பகுதியில், காஷ்மீரப் பகுதி ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அதனைச்சுற்றிலும் இமயத்தின் பகுதிகளான கரிமுக், அமர்நாத் ஆகிய சிறு குன்றுகள் அமைந்துள்ளன. இப்பள்ளத் தாக்கின் வடமேற்கில் பனிகால் மலைத்தொடர்கள் அமைந்துள்ளன. பாரமுலா பகுதியில் காஷ்மீரின் பிறிதோர் எல்லை உள்ளது. காஷ்மீரின் பருவநிலை கோடைகாலம், வசந்தம், இலை உதிர் காலங்களில் உடல் நலத்திற்கு உகந்ததாக இருக்கும். குளிர்காலத்தில் கொட்டும் பனியை தாங்கமுடியாமல் காஷ்மீரத்து மக்களே வீட்டினுள் முடங்கிக் கிடப்பார்கள். குளிர்கால முடிவில் தான் காஷ்மீரத்திலுள்ள இந்துக்கள் மகாசிவராத்திரி நாளை மிகவும் ஆடம்பரமாக கொண்டாடுகிறார்கள். சிவசக்தி இணைப்பை குறிப்பிடுவதாக உள்ள இந்த நன்நாளை பாரம்பரியமாகவே அங்கு நினைவிற் கொள்ளுகிறார்கள். மகாசிவராத்திரி பற்றி காஷ்மீரத்தில் ஏராளமான புராணக்கதைகள் வழங்குகின்றன. காஷ்மீரத்திலுள்ளஅமர்நாத் குகை, அங்கு கொண்டாடப்படும் மகாசிவராத்திரி ஆகியவை காஷ்மீரத்தில் சைவசமயத்தின் தாக்கத்தை வெளிப்படுத்துவதோடு உலகிலேயே இந்து மதப்பெருமை காஷ்மீரத்திலும் விளங்குகிறது என்பதற்கு சான்றாகும். காஷ்மீர சைவம் வேதாந்தம் சாங்கிய தத்துவம் ஆகியவற்றிற்கு மிக நெருக்கமானது. காஷ்மீரத்தில் நாம் காணும் தாந்திரீகம் மற்றும் சக்தி வழிபாட்டிற்கும் இது உட்பட்டதாகும். லலிதா சகஸ்ர நாமத்தில் குறிப்பிடப்படும் ஐம்பது பீதாக்களில் காஷ்மீரமும் ஒரு சக்தி பீதாவாகும்.

டாக்டர். ராதாகிருட்டினன் இந்தியாவின் உண்மையான நிலைத்த பெருமை அதனுடைய ஆன்மீக வாழ்வில் அடங்கிஇருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

இந்தியாவின் மிகச்சிறந்த பெருமைக்கு, அதனுடைய இராணுவ பெருமையோ, சிறந்த அரசியல்வாதிகளோ அல்ல. ஆன்மீகத்தத்துவத்தை போற்றிக்காத்த அந்நாட்டின் ஞானிகளே

ஆவர். காலத்தின் தேவைக்கேற்ப சிறந்த பேருண்மைகளை உணருகின்ற திறமையும், விசாலமான அறிவும் அந்த ஞானிகளுக்கும் அறிஞர்களுக்குமே இருந்தன. இறைவன் ஒன்றே என்னும் அவர்களது கொள்கை பகுத்தறிவு வாதம் பேசப்படு-கின்ற இந்தக் காலத்திலும், உண்மை என ஒத்துக் கொள்ளப் படுகிறது. எனவே இந்தியாவின் அங்கமாகிய காஷ்மீரம் தனக்கு என்று ஒரு சைவ தத்துவத்தை கொடுத்ததில் வியப்பில்லை,

தத்துவம் என்ற சொல் பரந்து பட்ட அளவில் அறிவை நேசிப்பது என்றே பொருள்படும். மனிதனுக்கு வேண்டிய இம்மைக்-கும், மறுமைக்கும் உரியவற்றைப்பற்றி தத்துவம் பேசும், மனிதனின் உண்மையான இயல்பு என்ன? உலக வாழ்வின் முடிவு-யாது? மனிதன் வாழும் இந்த உலகத்தின் இயல்புயாது? இந்த உலகத்தை படைத்தவர் இருக்கிறாரா? உலகம், இறைவன், ஆகியவற்றோடு அன்றி தன்னைப்பற்றியும் அறிந்து கொண்ட அளவில், இந்த உலகில் மனிதன் எப்படி வாழவேண்டும்? சைவ சித்தாந்தம் இவற்றைப் பற்றியெல்லாம் விரிவாக பேசுகிறது. பருப்பொருள் நுண்பொருள் ஆகியவற்றினை நம்பும் இந்ததத்துவம் எளிதில் விளங்கச் கூடியதே வாழ்க்கையை அறிந்து கொள்வதோடு அன்றி அனுபவிக்கவும் வேண்டும்; உண்மையாக இருக்கும் இறைவனையும் காணவேண்டும். பிரமம் என்பது உண்மை அது என்று அழியாத ஞானம் ஆகும் நன்மையும், ஒருமைப்படும் பரிபூரண அமைதியும் பிரமத்தில் உள்ளது கடவுள் ஒருவனே. எல்லா வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவன். மானுடத்திற்கு தேவையான அனைத்தையும் வழங்குபவன். அவன் அறியாதது ஒன்றில்லை. ஞானத்தின் தொடர்பினாலே மக்கள் அனைவரையும் அவன் ஒன்று சேர்க்கிறான்.

தொன்மையான இந்துமத சிந்தனையின் ஒரு கூறே சைவ சித்தரந்தமாகும். ஆறாறு தத்துவமும் ஆன்மாவும் இறைவனும் அதற்கு உடன்பாடே. உடல் வேறு மனம் வேறு என்பதை ஒத்துக் கொள்ளாத ஒரு பொருண்மை வாதம், மூலப்பொருள்கள் ஒன்றுக்கு மேற்பட்டவை என்று கொள்ளும் அனேகான்ம வாதம் ஆகிய இரண்டிலிருந்தும் இது மாறுபட்டதாகும் சாங்கியர்களின் இருபத்து நான்கு தத்துவங்கள், யோக முறை போல அன்றி, சைவம் முப்பத்தாறு தத்துவங்களை உள்ளடக்கியது. அத்வைத வேதாந்த-மும் இக்கருத்துக்கு உடன்பாடு தான்,

பஞ்சபூதங்களை நாம் அறிவோம்—விண், காற்று, நெருப்பு, நீர், நிலம். இவற்றுள் இறுதியான நிலத்திற்குரிய இயல்புகள் ஐந்து — ஒலி, உணர்வு, நிறம், மணம், சுவை. இவற்றைத் தன் மாத்திரைகள் என்று குறிப்பிடுகிறோம். சிவஞான மாபாடியம் கூறுவது போன்று ஜடப் பொருளை இவ்வாறு பல்வேறு கோணங் களில் பார்க்கிறோம். தாமச குணம் மிகுந்திருக்கும்போது அகங் காரத்தின் விளைவாகவே தன்மாத்திரைகள் தோன்றுகின்றன. பஞ்சபூதத்தின் விளைவாகவே அகங்காரம் பிறக்கன்றது சாங்கிய தத்துவப்படி புலன் உணர்விற்கும், செய்கைக்கும் உரிய-தாகிய உறுப்பே 'மனஸ்' ஆகும். அகங்காரம் அறிவின் பாற் பட்டது பொருள்களை வேறுபடுத்திக்காணும் அகங்காரம் உள்-மனத்தில் தானே எழுவதாகும். புத்தி, அகங்காரம், மனது, சித்தம் ஆகியவை உள்ளுறுப்புகளாகும். விரும்பத்தகாத இவற்றை உள்ளடக்கிய இருபத்துநான்கு நியதிகள் போக்ய கண்டம் என்று அழைக்கப்படுகின்றன.

சைவத்தில் மூலப்பிரகிருதி மாயா என்றும் அழைக்கப்படுகிறது. அசுத்தமாயையின் விளைவு தான் இது. இதுவே காலம், நியதி, கலை, என்னும் மூன்று பிரிவாகப் பரணமிக்கிறது. ஒன்றைச் செயற் படுத்துவதற்கு எல்லா சாதனங்களும் இருந்தாலும் காலம் கனி-யாமல் காரியம் கைகூடுவதில்லை. ஒவ்வொரு ஆன்மாவும் குறிப்-பிட்ட காலங்களில் அதனதன் பயனை அனுபவிக்கச் செய்வதே ஆகும். கலை என்னும் தத்துவம் ஆணவ மறைப்பைச் சிறிதே நீக்கி ஆன்மாவின் கிரியா சத்தியை எழுப்புவதாகும். இவ்வாறு வருகின்ற காலம் நியதி, கலை, வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்களே பஞ்ச கஞ்சுகம் என்றும் அழைக்கப்பெறுவன.

பரிசுத்தமான கொள்கைகள் ஐந்தனுள், சிவதத்துவம் முத-லாயது. சக்தி, சதாசிவம், ஈஸ்வரம் சுத்த வித்யம் ஆகிய நான்-கனுக்கும் இதுவே காரணம் ஆயது சிவதத்துவம் என்பதும் எங்கும் பிரிந்து நிற்பது என்றும் அழியாதது. அறிவு, செய்கை ஆகிய இரண்டின் விளைவாயது. இருப்பினும் சிவதத்துவம் சிவத்தோடு தொடர்பு படுத்தக் கூடியது அல்ல. சிவமோ அதனுள் அடங்கிய சக்தியோ இத்தத்துவங்களினால் விளைந்தது அல்ல. ஆயின்,

அவைகளும் மாறுதலுக்கு உட்பட்டு விடுமே! எனவே சிவ தத்துவம் என்பது அண்டம் என்னும் மகாமாய நிலையிலிருந்து வெளிப்பட்டதேயொழிய அசுத்த மாயையினின்றும் தோன்றியது அல்ல. தத்துவப்பிரகாசத்துக்கு அகோர சிவர் தரும் உரைப்பொருளை டாக்டர் பரனட் என்பார் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்க்கிறார் "பிரத்திபட்சக் கொள்கையாளரும் மாயை என்பது பரிக்கிரக சக்தி என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். தத்துவார்த்தக் கொள்கையாளரே ஜடப் பொருளையெல்லாம் கண்ணாடியில் காணும் பிம்பத்துக்கு ஒப்பிடுகிறார்கள்". அகோர சிவர் இதனைக் கண்டிக்கிறார். அவருடைய கருத்து பரிபூரணமாக தத்வங்களில் கூட முறையான வளர்ச்சியும் சிக்கலும் உண்டு என்பதே.

ஆன்மாக்கள் எங்கும் பரந்து இருப்பவை. எல்லையற்றவை. யாவற்றையும் உணர்ந்தவை. ஆயினும் அனுபவ பூர்வமாக நோக்கின் அவை சிறிதே அறிந்தன போலும், வரம்புக்கு உட்பட்டு நிற்பன போலும் தோற்றுகின்றன. மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றுக்கு அது கட்டுப்பட்டிருப்பதே இதற்கு காரணம். ஆகும். இம்மூன்றுக்கும் உட்பட்டிருப்போரே சகலர் ஆவர். மாயைக்கு மட்டுமே கட்டுப்பட்டிருப்போர் பிரளயா கலர் ஆவர்.

கடவுள் தூய்மையானவர். வல்லவர். அனைத்தும் அறிந்தவர் இரக்கம் மிகுந்தவர். எந்த விதமான பற்றுக்கும் அப்பாற்பட்டவர். திடப்பொருளான இந்த உலகிற்கு சக்தி பூர்வமான காரணமாயவரும் அவரே. எல்லா விதமான காரியங்களுக்கும் காரணம் ஆகியவரும் அவரே. ஆன்மாக்களும் இறைவனைப் போன்றவையே. இருப்பினும் அவை ஆதாரம் அற்ற ஆணவத்தால் மறைக்கப்பட்டுள்ளன. அறியாமை எனும் ஆணவத்தை அசுத்தமாயை என்பர். இதனை ஓரளவு போக்கி விட இயலும். திரோத்தம சக்தி என்று கூறப்படும் தன்னிச்சையான திறமையினால் இறைவன் இயங்குகிறார். பிராரப்த கர்மத்தின் துணையினாலே ஆன்மீகத் தெளிவு பெற்ற பிறகு கூட தூலசரீரம் நிலைபெற்றிருக்க முடியும். ஆயினும் ஒளிபெற்று நிற்கின்ற ஆன்மாவை அதனால் கட்டுப்படுத்த முடியாது. சிவத்துடன் ஐக்கியமாகின்ற நிலையே சிவத்துவம் எனப்படும் உடம்பால் வேறுபட்டிருப்பினும், உள்ளத்தாலும் உணர்வாலும் சிவமயமாகி விடுகின்ற நிலையே அது.

சைவசமயத்தின் தோற்றம் ஆரியர்கள் இந்த நாட்டிற்குள் நுழைவதற்கும் முற்பட்டதாகும். சைவசமயத்தின் செல்வாக்கு சிந்து கங்கை சமவெளியிலிருந்து வங்கம் வரை பரவி இமயத்தை-யும் தாண்டி மத்திய ஆசியா வரை சென்றதாகும். எல்லா இறை-வனுக்கும் மேம்பட்டவரே சிவன் என்னும் கொள்கையே சைவ சமயமாகும் சைவசமயம் சார்ந்தோர் இறைவன் உண்டு என்னும் கொள்கை உடையோரே அன்றி, இறைவழிபாட்டிலும் ஆன்மார்த்-தமாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டோர் ஆவர். சிவன் உருவ மற்ற மூலமுதற்பொருள் என்றே பேசப்பட்டாலும், கடவுளர்க் கெல்லாம் கடவுளே அவர் என்பதும் நடைமுறையில் உள்ள நம்பிக்கை. ஈசன் என்றும் மகேஸ்வரன் என்றும் குறிக்கப்படும் இவரை ரிக்வேதம் 'ருத்ரன்' என்றே அழைக்கிறது. "தவத்தினா-லும் எளிமையினாலும் அடையக் கூடிய இறைவன் நம்மைப் பந்த பாசங்களிலிருந்து விடுவிப்பான். இறைவனுக்கெல்லாம் இறைவன் அவனே. மரணத்தை வெல்லும் அவனே நீலகண்டன்; திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள்; முக்கண்ணனும், அண்டசராசரங்களை ஆள்பவனும் ஆகிய அவனையே நான் சரண் அடைகிறேன்".

— ரிக்வேதம்.

(தொடரும்)

## கந்தபுராணச் சிந்தனை

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாட்பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனோர் வா வர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய்நின்ற மூர்த்தி இம் மூர்த்தியன்றோ!

— கச்சியப்பர்

# பவபூதியின் உத்தர ராம சரிதம்

வடமொழியில் கவிகாளிதாசனுக்கு அடுத்தபடியாக மதிக்கப் பெறும் நாடகக்கவிஞர் பவபூதி. இவரெழுதிய உத்தரராம சரிதம் வடமொழி நாடகங்களுள் புதிய உத்திகளைத் தன்னகத்தே கொண்டதாகும். மனோதத்துவ ரீதியில் எழுதப்பட்ட இந்நாடகம் வடமொழியில் புதிய கோணத்தில் புனையப்பட்ட தேன்றே கொள்ளலாம். நாடக நிகழ்ச்சிகள் அனைத்தும் வெளியுலகில் காண்பன போன்று அமையாமல், தலைமைப் பாத்திரத்தின் உள்மனத்தில் நிகழ்வது போன்று அமைக்கப்பட்டிருப்பதே ஒரு புதிய உத்தியாகும். காதலும், நகைச்சுவையும் மிளிர நாடகங்கள் எழுதப்பபட்ட பாரம்பரியத்தினின்றும் விலகி பவபூதி புனைந்த இந்நாடகம் ஒரு புதுமையானது என்பதில் ஐயமில்லை. பவபூதி யின் பிற நாடகங்களிலும் வரும் தலைமைப் பாத்திரம் ஏகபத்தினி விரதனாகவே இருக்கிறான். நகைச்சுவை எனும் பெயரால் கேலியும், கிண்டலும், கோமாளித்தனமும் இவரது நாடகங்களில் களில் காண்பது அரிது. பாரம்பரியமாக வரும விதூஷகனை இங்கு கான முடியாது. கருணை ரசம் பொங்கி வழியும் பவபூதி யின் நாடகங்ளில அளவோடு கூடிய காதலும், அளவற்ற அன்பும் பாசமும் கதா பாத்திரங்களிடம் காணக்கிடக்கும் இயல்புகளாகும்.

வால்மீகியின் ராமகாதையைத் தனது மூலப்பொருளாக எடுத்துக்கொண்டாலும், காவியக் கருவிலும், கட்டமைப்பிலும் கதை சொல்லும் முறையிலும், தேவையான சிற்சில மாற்றங்களை பவபூதி செய்துள்ளார். நாடகத்தின் உள்ளேயே நாடகம் எனும் உத்தியைப் பவபூதி திறமையாகக் கையாண்டுள்ளார். ஒரு சில கட்டங்களில் நாடகம் பார்ப்போரும் மேடைக்கு வந்து நாடகத்தில் கலந்து கொள்ளுதற்கு ஏற்ற வகையில் இவர் எழுதியிருப்பது பிறிதொரு புதுமையாகும்.

இரக்க உணர்வை மிகுத்துக் காட்டுகின்ற இடங்களிலும், உருக்கமான காட்சிகளைச் சித்தரிப்பதிலும் பவபூதி காளிதாசரை விஞ்சி விடுகிறார் என்பது வரலாற்றுப் பேராசிரியர் ஏ. எல். பாஷம் அவர்களின் கருத்தாகும். தம்மைப்பற்றிய எந்த விவரத்தையும் வெளியிடாத புலமையின் அடக்கத்தைப் பிற வடமொழி வாணர்களிடம் காணுகிறோம். முற்காலத்திய தமிழ்ப் புலவோரும் அப்படித்தானே! ஆனால் பவபூதியோ தம்மைப் பற்றியும் தமது

குடும்பத்தைப் பற்றியும் சிற்சில செய்திகளை நாடக முன்னுரை-யிலேயே குறிப்பிடுகிறார் மகாராட்டிர மாநிலத்தில் நாகபுரி-விதர்ப்பப் பகுதியில் பத்மபுரியைச் சார்ந்த வைதிக பிராமண குடும்பத்தில் பவபூதி பிறந்தவர். ஞானநிதி என்பாரைக் குருவாக ஏற்று இலக்கிய இலக்கணங்களைக் கற்றவர்.

பவபூதி வாழ்ந்த காலத்தைப் பற்றிய விவரங்கள் தெரிந்-திலது. 7-ஆம் 'நூற்றாண்டைச் சார்ந்த பரணரும், 8-ஆம் நூற-றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த தண்டியும் பவபூதி பற்றி யாண்டும் குறிப்பிடவில்லை. பத்தாம் நூற்றாண்டுக்குப்பின வாழ்ந்த சோமதேவர், சோமேந்திரர் ஆகியோர் இவரைச் சிறந்த நாடகக்கவிஞர் என்று போற்றுகிறார்கள். அதிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த ராஜசேகரா எனும் நாடகாசிரியர் தன்னைப்பவ பூதியின் மறுபிறப்பு என்றே சொல்லிக் கொள்ளுகிறார். வக்பதிராஜா என்னும் கவிஞர் கனோசி பகுதியை ஆண்ட யசோதவர்மன் எனும் அரசனால் ஆதரிக்கப்-பெற்றவர். இந்தக் கவிஞர் பவபூதியின் புகழ்பாடுகிறார். தனது கருத்துக் கருவூலங்களுக்கு பவபூதியின் சிந்தனையே ஆதாரமாக இருந்தது. என்றும் குறிப்பிடுகிறார் இவற்றையெல்லாம் ஒருங்கு வைத்துக்குப்பார்க்கும் போது பவபூதியின காலம் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம் என்றே அனுமானிக் கின்றனர்.

தான் பிறந்த நாகபுரிப் பகுதியினை விட்டு பவபூதி கன்-னோசி நாட்டுக்கு வர வேண்டியிருந்தது. வைதீகக் குடும்பத்தில் பிறந்த இவர் ஆச்சாரங்களை விட்டுவிட்டு நாடகம எழுதுவதும், பிடிப்பதும் இவரது சமூகததினருக்குப் பிடிக்கவில்லை. கலை-யுணர்வும், கவிதையார்வமும் நாடகப்பற்றும் இவரை விட்ட பாடில்லை, இரண்டுக்கும் இடையில் சிக்கித் தவிக்காமல், நாடக வாழ்க்கை நடத்தினவரோடு சேர்ந்து பவபூதி பிறந்தகத்தை விட்டு வெளியிடங்களுக்கு வந்து விட்டார். இளமைக் காலத்தில் நாடகத்துறையில் தனக்கு ஏற்பட்ட சமூக எதிர்ப்பு அவரது உள்-ளத்தைவிட்டு நீங்கவில்லை. தனது உத்தர ராமசரிதத்திலேயே கலையுணர்வை எதிர்க்கின்றோரைக் கண்டிக்கின்ற பகுதிகள் எல்லாம் இளமைக் கால நிகழ்ச்சிகளின் விளைவே என்று ஆய்-வாளர்கள் கருதுகின்றனர். எட்டாம் நூற்றாண்டின் நாடகமேடை

பற்றிய அரிய செய்திகள் இவரது நாடகங்களில் கிடைக்கின்றன. நாடகம் எழுதியதோடு சிற்சில வேடமேற்று பவபூதியும் மேடை-யில் ஏறி நடித்துள்ளார் என்றும் தெரிகிறது. ஆங்கில நாடகக் கவிஞரான ஷேக்ஸ்பியரும் நாடகம் எழுதியதோடன்றி நடித்த-வரும் ஆவர் என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது. வடமொழி-யில எழுதப்பட்ட தமது நாடகங்களை களப்ரியநாதரின் திரு-விழாக்களில் மேடையேற்றப்பட்டதாக பவபூதி சொல்கிறார். விழாவெடுத்துக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த களப்-ரியநாதர் யாவர் என்று தெரியவில்லை. களப்ரியா என்பது பார்வதியையும், களப்ரியநாதர் சிவனையும் குறிக்கும் என்பது ஒரு கருத்து. களப்பி என்பது கன்னோசிக்கு அருகில் உள்ள இடம்; அச்சொல் இறைவனைக் குறிப்பதன்று என்றும் சிலர் விவாதிக்-கின்றனர். களப்ரியா என்பது ஒரு காலத்தும் பார்வதியைக் குறிப் பிட்ட சொல் அன்று என்கின்றனர். ராஷ்டிரக் கூடர் காலத்திய செப்பேடுகள் சிலவற்றில் களப்ரிய மூலைகளில் சேனைகள் நிறுத்தப் பெற்றிருந்ததாக ஒரு குறிப்பு வருகிறது. எனவே இது போர்க் களத்தைக் குறித்த சொல்லாகவும் இருக்கலாம். யசோவர்மன் என்னும் அரசன் வாக்பதிராஜா எனும் பிராகிருதக் கவிஞனைத் தனது அவையில் வைத்திருந்தார். வடமொழி வாணராகிய பவ-பூதியையும் அவன் வரவேற்றுக் கொண்டான் என்றும் சொல்லப்-படுகிறது.

பவபூதியின் கூற்றாக இற்றைநாள் கவிஞர்களும், நாடகா-சிரியர்களும் தத்தமது இலக்கியப் படைப்புகளில் ஏராளமான கருத்துக்களை எடுத்தியம்பி உள்ளனர். எனவே பவபூதியின் படைப்புகள் நிறைய இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆயினும் மூன்று நாடகங்களை காணக் கிடைக்கின்றன. மாலதி மாதவம், மகாவீர சரித்திரம், உத்தரராமசரிதம் எனும் மூன்றுமே அவை. முதலாவது ஒரு காதல் காவியம் மீதி இரண்டும் வால் மீகியின் இராமகாதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டவை மகாவீர என்னும் பெயர் இலட்சியப் புருஷனாக விளங்-கிய இராமபிரானைக் குறிப்பதேயன்றி அதே பெயருடன் விளங்கிய மத நிறுவனரை அல்ல. இராமனுடைய இளமைக்காலந் தொட்டு முடிசூடு வரை உள்ள நிகழ்ச்சிகளின் தொகுப்பே அந்நாடக மாகும்.

முடிசூட்டலுக்குப் பிறகு சீதையைத் தற்காலிகமாக இரான் கைவிட்டு விடுதலும்,சீதை தனது திண்ணிய கற்பனைத் தெய்வீகக் கற்பாக மிகுத்துக் காட்டுதலும் உத்தர ராமசரிதத்தின் கருத்துக்-களாகும். உத்தரம் என்றால் பின்னர் நிகழும் செயல் என்பதே பொருள். ராமனின் பட்டாபிஷேகம் முடிந்ததும் இந்நாடகம் துவங்குகிறது. துருமுகன் என்னும் இராமபிரானது அணுக்கத் தொண்டன், லங்காபுரியில் நெடுங்காலம் சிறைப்பட்டிருந்த சீதையின் கற்புடைமையில் ஐயங்கொள்ளுகின்றனர் மக்கள் எனும் செய்தியை வருத்தத்துடன் கூறுகிறான். சீதையைக் கைவிடுவ-தென்று முடிவு செய்கிறான் இராமன். பன்னிரண்டு ஆண்டு காலம் பிரிந்திருந்தது கூட துன்பமாகப்படவில்லை. எந்தக் கணமும் நெஞ்சு பிளந்து விடுமோ என்னும்படி பெருந்துயர்க் கடலில் இப்போதுதான் ஆழ்ந்துள்ளான். இந்த வருத்தம் தோய்ந்த உணர்வுகளைச் சுமந்து கொண்டு பஞ்சவடியை நோக்கிப் போகிறான். அங்கே சீதையின் தோழியாகிய வசந்தி என்பாளைச் சந்திக்கிறான். கானகத்தில் வாழ்ந்த காலத்தே சீதையும் தானும் ஓடியாடி இயற்கைச் சூழலில் மகிழ்ந்து திரிந்த இடங்களை எல்லாம் அவள் ராமனுக்கு நினைவூட்டுகிறாள். பழமை நினை-வூட்டுகிறாள். பழைமை நினைவுகளில் மூழ்கிப் போன இராம-னுக்கு இப்போது அந்தச் சீதையைத் துறக்கச் செய்துள்ள முடிவு மனக் கலக்கத்தையும் குழப்பத்தையும் விளைவிக்கிறது. கண்கள் கலங்குகின்றன. மயக்கமுறுகிறான். அவன் அறியாமலேயே கனவில் வந்த சீதை அவனது கண்களைத் துடைத்து, கன்னங்-களை வருடிக் கொடுத்து மூர்ச்சை தெளிவிக்கிறாள். கண் விழித்துப் பார்க்கிறான். வசந்தி மட்டுமே நின்று கொண்-டிருக்கிறாள்.

"சீதையின் கற்பு நெறியில் நான் ஐயப்படவில்லை. மக்கள் அப்படி ஐயுற்று நோக்கும் போது, மக்களின் கட்டளையை நிறைவேற்ற வேண்டிய மன்னனாகிய நான் எனக்கென்று ஒரு தனியொரு கருத்தினை வைத்துக் கொள்ள முடியவில்லையே" என்று புலம்புகிறான். தனக்காக உள்ளன்போடு இராமன் இப்படிப் புலம்புவதையும் சேய்மையிலிருந்து சீதை கேட்டு, கணவன் தன்னைக் குறைபட்டவளாக நினைக்காவிடில், அதுவே தனக்குச் சிறப்பு என்று மகிழ்ச்சி அடைகிறாள்.

இந்நாடகத்தின் கடைசி அங்கம் நாடகத்துள் ஒரு நாடகமாக அமைந்துள்ளது. நாட்டு மக்கள் ஐயுறும்போது நான் உயிர் வாழ விரும்பவில்லை என்று சீதை தீக்குளிக்க எத்தனிக்கிறாள். ஆனால் தெய்வீக அருளால் அவளுக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை. அவளது கற்பு நெறி களங்கம் அற்றதென்று உறுதியாகிறது. சீதை கங்கா நதியிலிருந்து எழுவது போல காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. அரங்கிலிருந்த மக்கள் அனைவரும் எழுந்து நின்று அவளுக்குத் தலை வணங்குகின்றனர். அவளைத் தவறாக எண்ணியமைக்கு மன்னிப்புக் கோருகின்றனர். மீண்டும் ராமனும் சீதையும் இணைந்து வாழ வேண்டுவதுடன் நாடகம் முடிவடைகிறது.

---

## தமிழறிஞர்கட்கு ஒரு வேண்டுகோள்

எழுத்திலும் தூயதமிழ்ச் சொல்லைப் பயன்படுத்துதல் வரவேற்கக் கூடிய செயலாகும். புத்திய சொற்களைப் படைத்தலும், மறைந்து போனதும், வழக்காற்றில் இல்லாத பழஞ்சொற்களைப் புதுப்பித்தலும் ஆய செயல்களும் போற்றக்கூடியனவே இவற்றுள் புதிய சொற்களைப் படைத்தலில் ஒரு தவறு தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. சான்றாக ஒன்று பார்ப்போம். ஆய்வு நிகழ்த்திப் பட்டங்கள் பெறுதலை 'டாக்டர்' பட்டம் என்று கூறுகிறோம். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் இதனை முனைவர் என்றும், மதுரைப் பல்கலைக்கழகம் இதனை அறிஞர் என்றும் அழைக்கின்றன. இலங்கையில் இதனைக் 'கலாநிதி' என்கின்றனர். ஒரு காலத்தில் இதனைப் பண்டாரகர் என்றும் குறிப்பிட்டனர். இப்படித்தாறுமாறாக மொழிபெயர்க்காமல் உலகம்முழுதும் புழக்கத்தில் உள்ள டாக்டர் எனும் சொல்லையே வைத்துக்கொண்டால் என்ன?

## நூல் மதிப்புரை

நூல் — சிவமதி (துன்பியல் காப்பியம்)
ஆசிரியர், சே. மாசிலாமணி
வள்ளலார் பதிப்பகம்
மதுரை — 1.

அன்பின் அடிப்படையில் முகிழ்க்கும் எந்தக் காதலையும் இந்த உலகம் மனமார ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால் எதிர்த்திருக்கிறது. இன்னல்களை விளைவித்திருக்கிறது. இந்த எதிர்ப்பும், இன்னலுமே பற்பல இறவாத காப்பியங்களையும் சோக வரலாற்றினையும், துன்பியல் நாடகங்களையும் தோற்றுவித்துள்ளன. தனிப்பட்ட காதலர்கள் பாதிக்கப்பட்டாலும் சமூகத்தின் கடுமையான எதிர்ப்பு வீர காவியங்களின் விளை நிலமாக இருந்துள்ளன, எதிர்ப்பும் ஒரு வகையில் நன்மையே. சரளமான கவிதையால் யாக்கப்பட்ட 'சிவமதி' எனும் இக் காப்பியமும் அப்படித்தான் வாழ்க்கையில் இணைய முடியாமல் மரணத்தைத் தழுவிக் கொண்ட சிவமணி, இந்துமதி ஆகிய காதலர்களை நூலின் தலைப்பிலேயே இணைத்து விட்டார் இக்கவிதையாசிரியர். கதையின் போக்கில் பரபரப்பும் இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தான் சிவமணி கோடைக்கானலுக்கு அனுப்பப்படுகிறான். கதைத்தொடர்பில் அப்பகுதி ஒட்ட வைக்கப்பட்ட துண்டு போல் தோன்றுகிறது. இந்திய விடுதலைக்குச் சற்று முன்னர் நிகழ்ந்த கதைபோன்று கதைச் சூழல் அமைக்கப்பட்டுள்ளது. நம்மிடையே அன்று வாழ்ந்த பற்பலரும் கதையில் வருவதால், உண்மை நிகழ்ச்சியே காவியமாக்கப்பட்டுள்ளதோ என்று எண்ண இடமிருக்கிறது. சாதியின் பெயர்களும், பட்டங்களும் மறைந்து கொண்டு வருகிற அல்லது மறைக்கப்பட வேண்டும் என்று எண்ணுகிற இயற்றை நாட்களில் அய்யரும், சேர்வையும், கோனாரும், முதலியும் பட்டப்பெயரோடு வந்து போவது பொருத்தமாகத் தெரியவில்லை. ஏழாவது பகுதியில் இந்திய வரலாறு அருவியாய்க் கொட்டுகின்றது. இருப்பினும் கல்லும் மண்ணுமாய் ஆங்கிலச் சொற்களும் தலையில் விழுகின்றன.

— குப்தரை அது போல் சார்ந்து கோல்டனேஜ் ஆக்கினார்கள்.
— சிம்பாலிக் கான சிற்பம் (43)
— வயலன்ஸைத் தூண்டிற்றாமே (103)

பண்டிதருக்கின்றிப் பாமருக்கும் பயன்படுமாறு எளிமையும் இனிமையும் கலந்த நூல்கள் எழுதப்படவேண்டும் என்னும் இற்றை நாட்களில யாருக்கும் எளிதிலே புரியாத சில உவமை களையும் சொற்றொடர்களையும் தவிர்த்திருக்கலாம்.

(i) — ஜீயுஸைத் தள்ளி விட்டு
ஜீஸஸை ஏற்றுக் கொண்டார்
(ii) — பிலாத்துவின் கழுகு தன்னை
பிடித்திட வந்த மாலை

பக்கம் 19-இல் (15) ஆம் பாடலில் உபமானத்திற்கும் பொருளிற்-கும் பொருத்தம் இல்லை. காவியத்தின் பல்வேறு தலைப்புகள் இற்றைக்கால நாவலில் வரும் தலைப்புகளைப்போல் புதுமை-யாக உள்ளன. 8-ஆம் பக்கத்தில் 16-ஆவது பாடல் அழகிய சந்-தப்பாடலாக அமைந்துள்ளது தமது நூல் வாசிக்கப்பட வேண்டும் என்ற அக்கறையோடு பக்கங்களை வெட்டிக் குறைத்திருப்பதாகக் கூறும் நூலாசிரியர், அச்சுப்பிழைகளையும் வெட்டி நூலை மாசு-மறுவின்றிக் கொண்டு வந்திருக்கலாம். நெஞ்சிலே குமைந்து கிடக்கும் கருத்துகளைக் கவிதை வடிவில் காண விரும்பும் ஒரு எழுத்தாளரை ஆதரிக்கும் நல்ல நோக்கத்தோடு இந்நூலை ஒரு முறை படித்துப்பார்க்கலாம்.

(2)

நூல் — மகாகவி உள்ளூர்
வெளியீடு : சாகித்ய அகாடெமி
புது டெல்லி — 1

'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் அண்மையில் வெளிவந்துள்ள இந்நூல் வழக்கம் போலவே அழகிய முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அறுபது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த ஒரு மலையாள அறிஞரின் வாழ்க்கை, பணிகள், இலக்கியத் தொண்டு ஆகியன பற்றிய முழுமையான நூல் இது. வள்ளத்தோள், ஆசான், சங்கர குருப்; ஆகியோரைக் கவிஞராகவும், தகழியை நாவலாசிரியராகவும் குறிப்பிட்டு விடலாம். உள்ளூர் பரமேசுவரன் அய்யரை அப்படிக் கூறினால் அச்சொல் அவரது முழுத்தன்மை-யினையும் குறிப்பிடாது தமிழ் வடமொழி ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் நுழைபுலம் மிக்க உள்ளூர் ஒரு கவிஞர் மட்டு மல்ல; ஆராய்ச்சியாளர், வரலாற்றுப் பேரறிஞர், திறனாய்வாளர் பெரும் புலவர். வாழ்நாள் முழுதும் படிப்பதும், சிந்திப்பதும்

எழுதுவதுமே தன் தொழிலாகக் கொண்டிருந்த பேரறிஞர். எளிய குடும்பத்தில் பிறந்து எழுத்தராகப் பணியினைத் தொடங்கி படிப்படியாக உயர்ந்து நீதிமன்றத் தலைவராகவும், திவானாகவும் விளங்கியவர். அலுவலகப் பணிகளுக்கு எந்த விதத் தடையும் இன்றி இலக்கிய வரலாற்றுச் சிந்தனைகளையும் அவர் வளர்த்துக் கொண்டிருக்கிறார். மகாகவி வள்ளத்தோளே இவரை ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம் என்று போற்றியுள்ளார். முப்பதுக்கு மேற்பட்ட கவிதை நூல்களையும், ஆறு காப்பியங்களையும், தொகுப்பு நூல்கள் பன்னிரண்டையும், உரைநடை நூல்கள் பத்தினையும் இவரது உழைப்பின் முயற்சி என்னும்போது உள்ளூரை எப்படிப் பாராட்டினாலும் தகும். வியத்தகு நினைவாற்றலும், ஆய்வுத்திறனும் இவரது பிற சிறப்புகள். மலையாள இலக்கியம் பற்றி முப்பது ஆண்டுகளுக்கு மேல் அரிதின் முயன்று உள்ளூர் எழுதிய கேரள சாகித்ய சரித்திரம் ஒன்றே காலங்காலமாக அவரை நினைவூட்டுவதாகும்.

பேராசிரியர் சுகுமார் அழிக்கோடு உள்ளூர் பற்றிய ஏராளமான செய்திகளை வரன்முறையாகத் தொகுத்து அளித்துள்ளார். ஒரு பேரறிஞரைப், பற்றிய முழுமையான நூலைப்படித்த மகிழ்வு ஏற்படுகிறது. உள்ளூரின் எழுத்து பற்றிய வாதப் பிரதிவாதங்களைக் கடைசியில் தொகுத்திருப்பது நூலின் சிறப்பு. ஆயினும் உள்ளூர் எந்த ஆண்டு காலமானார் என்ற செய்தி நூலில் யாண்டும் காணப்பட்டிலது. தமிழில் பெயர்த்த பேராசிரியர். இராமலிங்கம் அடிக்குறிப்பின் மூலம் அச்சிறு குறையினைப் போக்கி விட்டார். அவர் பெயர்த்திட்ட கவிதைகள் (பக். 71, 74, 76, 80) சிறப்புற அமைத்துள்ளன. பல்வேறிடங்களில் மிடுக்கான தமிழ் நடை தெளிவாகத் தெரிகிறது. ஆயினும் சிற்சில இடங்களில் நடையின் விறுவிறுப்பும் திண்மையும் இயல்பாக இன்றி வலிந்து புகுத்தப்பட்டது போல் தோன்றுகிறது. மொழிபெயர்ப்பு என்ற உணர்வு பல்வேறிடங்களில் வெளிப்படையாகத் தெரிகிறது. மூல நூலின் கருத்தினை வாங்கித் தமிழ் மரபுக்கேற்ற முறையில் மொழி நடை அமைந்திலதே என்ற உணர்வும் நமக்கு ஏற்படுகிறது.

(i) பக்கம் - 70 - காளிதாசன், ஷேக்ஸ்பியர், கெதே போன்ற உண்மைக் கவிஞர் அனைவரும் பரியாய வகைமைக்குள் அவர்களை அடக்கிப் பார்க்க முயலும் பயனற்ற முயற்சியை முறியடித்திருக்கிறார்கள்.

(iii) பக்கம் - 57 - இப்பின்னணியின் இழைவமைதியில் மூன்று தனி வேறுபட்ட முறுக்கிழைகள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டுள்ளன.

(iii) பக்கம் - 111 - மேலை-கீழை இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளைக் கருவிகள் போல் கையிலே தாங்கிக் கொண்டு இலக்கிய மதிப்பீடு செய்ய முற்பட்ட ஜோசப் முண்டசேரி போன்ற திறனாய்வாளர்கள் .........

'காலம்' எனும் சொல்லே போதுமானது; ஆனால் 'ஊழி' எனும் சொல்லை (பக். 7) ப் பயன்படுத்துவதும், தன்மை (originality) செவ்வியல் பாங்கு (classicism), உருவார்ப்பு (வடிவம்) மூப்பர்கள் என்பனவற்றின் சொல்லாட்சியும் மறுபரிசீலனைக்கு உரியன. பக்கம் - 64-இல் 'திராவிட யாப்பு' எனுஞ் சொற்றொடர் மூல நூலினை அப்படியே பின்பற்றி எழுதப்பட்டதா? இல்லையாயின் அதன் பொருள் பற்றி பெயர்ப்பாளர் என்ன கருதுகிறார் என்று தெரியவில்லை. அவருக்கென்று இது பற்றிய தெளிவான கருத்து இருந்திருக்குமாயின், அதனை அடிக்குறிப்பில் போட்டிருக்கலாம். உள்ளுரைப் பற்றிய ஒரு சிறந்த நூலைவெளியிட்ட சாகித்திய அகாடெமியினர் பிற இந்திய மொழிகளிலும் இதனை பெயர்க்கச் செய்தல் நன்று.

— பழனி. அரங்கசாமி

— ❋ —


## இதழியல் பற்றிய தமிழ் நூல்

தமிழில் இதழியல் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவோரும் இதழியலைப் பாடமாகப் பயில்வோரும் அறிந்து கொள்ள வேண்டிய செய்தித்தாள் வரலாறு, செய்தி நிறுவனங்கள், விளம்பரங்கள் பத்திரிகைச் சட்டங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கிய செய்தி உலகம் - (216 பக்கங்கள்) நூல் - விலை ரூ. 20/- M.O. அனுப்பினால் நூல தபாலில் அனுப்பி வைக்கப் பெறும்.

முத்தமிழ் நிலையம்
156, ராஜாஜி புரம்,
நாகமலை,
மதுரை-625019.